# தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர் : கண்ணதாசன்

ஆனாங்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை | 20-9-58 | சனிக்கிழமை | இதழ் 14


# இரண்டாயிரம் பள்ளிகளை இணைத்த மன்றம்


## கல்வி

மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே இன்பத்தை அடைவதற்குக் கருவியாய் இருப்பது செல்வம் செல்வங்கல்வி பொருள் என்று இருவகைப்படும்.

பொன், மணி முதலிய பொருட்செல்வத்தினும் கல்விச் செல்வம் சிறந்தது. ஒருவனின் பொருள் பங்காளிகளால் பகுத்துக்கொள்ளப் படும்; கள்வராலும் வலிய பகைவராலும் கவர்ந்து கொள்ளப்படும்; கோபங் கொண்ட கொடுங்கோல் மன்னரால் எடுத்துக் கொள்ளப்படும்; வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்படும்; வெந்தழலால் வெந்து சாம்பலாய் விடும்; தம்மை அண்டி நேர்க்கு அளித்தால் குறையும் இவற்றால் பொருள் அழியுந்தன்மையை உடையது என்பதனை அறியலாகும். அன்றியும் அது பெரும்பாலும் தக்காரிடத்து உண்டாகி நிலைபெறாதது; உடலோடு அழிவது மேலும் அதனை ஈட்டல், காத்தல், இழத்தல் என்றிவற்றால் மக்கள் துன்புறுவர். அது பலரையும் பகையாக்கும்.

கல்வியோ எவராலும் கவரப்பட மாட்டாது தீ, வெள்ளம் முதலியவற்றால் நாசமுறாது; பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க வளருமேயன்றி, குறையாது. ஆகவின், இது அழியுந்தன்மை உடையதன்று; மேலும், பெரும்பாலும் தக்காரிடத்தே உண்டாகி நிலை பெறும். ஒருவனது உடலழியினும் அவன் கற்ற கல்வி அழியாமல், அவனுயிரோடு கிடந்து அவ்வுயிர் சென்றவிடத்துச் சென்று உதவும் இதனை ஈட்டலும் காத்தலும் எளிது; இழத்தலே இல்லை. இது பகையை நட்பாக்கும்.

மு. நடராசன் III FORM



## பொங்கலோ பொங்கல்

தமிழ் நாட்டிலே பல சாதிகள் உண்டு. பல சமயங்கள் உண்டு ஆயினும் தமிழர் எல்லார்க்கும் பொங்கல் நாள் ஒரு புனித நாள். அந்த நாளில், வீடு தோறும் சுதையின் விளக்கம்; வீதி தோறும் மங்கல முழக்கம்; 'பொங்கல் பொங்கல்' என்பதே எவரும் பேச்சு. பொங்கல் விழா நடைபெறும் காலமும் இனிய காலம்; கார் உலாவும் வானமும், நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம். இயற்கை அன்னை பசுமையான புடவை உடுத்து, பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும் கனியும் கரும்பும் அணிந்து இன்பக் காட்சி தரும் காலம்.

பொங்கலுக்குத் தலை நாள் போகி பண்டிகை. போகி பண்டிகையை அடுத்து வருவது பொங்கல் புது நாள். அந்நாளில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' நிகழும்: வீட்டிலுள்ள பழம் பானைகள் விடை பெறும்; புதுப் பானைகளில் பொங்கல் நடைபெறும். பால் பொங்கும் பொழுது "பொங்கலோ பொங்கல்" எனும் மங்கல ஒலி எங்கும் கிளம்பும், அப்போது, பெண்கள் குரவையிடுவர்; பின்பு "பூவும் புனலும் பொங்கலும்" கொண்டு இலுறை தெய்வத்தை வணங்குவர், அனைவரும் வயிறார உண்டு மகிழ்வர். பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல்.


முற்காலத்தில் மாடே செல்வமாக மதிக்கப்பட்டது. ஏன் என்றால் விளை நிலத்தில் ஏர் இழுப்பது மாடு; பரம்பு அடிப்பது மாடு; அறுவடைக் காலத்தில் சூடடிப்பது மாடு. களத்து நெல்லைக் களஞ்சியம் சேர்ப்பது மாடு. ஆகவே மாடு இல்லையென்றால் பண்ணையுமில்லை; பயிர்த் தொழிலுமில்லை. ஆகவே கழனியிற் பணி செய்யும் காளை மாடுகளும், காலையும் மாலையும் பாலளிக்கும் கறவை மாடுகளும் நோயின்றிச் செழித்து வளர்வதற்காக நிகழ்வது மாட்டுப் பொங்கல். அந்த நாளில் கன்று காலிகளுக்குக் கொண்டாட்டம். அவற்றை ஆற்றிலும் குளத்திலும் குளிப்பாட்டுவர்; கொம்பிலே பூவும் தழையும் சூட்டுவர்; மணிகளைக் கழுத்திலே மாட்டுவர். நல்ல தீனியை ஊட்டுவர், பொங்கல் முடிந்தவுடன் அந்தி மாலையில் வீதியிலே விரட்டுவர்; அவை குதித்துப் பாய்ந்து கும்மாளம் போடுவது கண்ணுக்கு இனிய காட்சியாகும். சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் பொங்கல் மங்கலமாக நடந்து வருகின்றது. இன்றும் அந்த

R. சுப்பிரமணியன் V FORM

# 27 வயதடைந்த சென்னை மாணவர் மன்றம்

விபரம்: உள் பக்கம்

# சென்னை மாணவர் மன்றம்



பேராசிரியர் மயிலை-சிவமுத்து

சென்னையில் ஒரு அதிசயமான அமைப்பு இருக்கிறது.

ஏறக்குறைய இரண்டாயிரம் பள்ளிகளுக்குமேல் தொடர்புகொண்டு இயங்கிவரும் மன்றம் ஒன்று இருக்கிறது.

இதிலே அதிசயம் என்னவென்றால், இந்த மன்றத்திற்கு நம்முடைய 'பெருமைக்குரிய' சென்னை அரசினரின், அல்லது 'மாபெரும்' டெல்லி ஆட்சியின் எந்த உதவியும் இதுவரை கிடைத்ததில்லை ஏன், வெறும் பாராட்டுக்கூடக் கிடைத்ததில்லை அதிகார பூர்வமாக.

அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள்; ஆட்சிப் பொறுப்பில் முக்கியமான பகுதியை நிர்வகிக்கும் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்; ஆளும் கட்சியின் தனிப்பெருந் தலைவர்கள் வந்திருக்கிறார்கள்.

வந்திருக்கிறார்கள்; வந்து பார்த்திருக்கிறார்கள்; பார்த்து வியந்திருக்கிறார்கள்; வியந்து பாராட்டியிருக்கிறார்கள்; பாராட்டி மகிழ்ந்திருக்கிறார்கள்.

அவ்வளவுதான்; அவ்வளவேதான்!

சர்க்காரிலிருந்து ஒரு 'சின்ன உதவி; சிறிய பாராட்டு...

ஊஹூம்; கிடையவே கிடையாது!

இருபத்திரேழு ஆண்டுகளாக இந்த அமைப்பு தொண்டு புரிந்து வந்திருக்கிறது. எத்தனையோ பள்ளிகளை, கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்களை எல்லாம் தமிழ்த்தேர்வு எழுதவைத்திருக்கிறது. ஏராளமான மாணவர்கள், தாங்கள் மன்றம் நடத்திய தமிழ்த் தேர்வில் பரிசும், பாராட்டும் பெற்றதைச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்திருக்கிறார்கள். என்றாலும், இன்னும் இந்த மன்றம் வாடகைக் கட்டிடத்திலேயே வாழ்கிறது. ஏன், இப்படி ஒரு மன்றம் இருப்பதேகூட வெளி உலகுக்குத் தெரியாமலிருக்கிறது. அதுதான் இதிலே பெரிய அதிசயம்!

'வலதுகை செய்யும் தருமம் இடது கைக்குத் தெரியக்கூடாது' என்று சொல்லுவார்கள். அதனால்தானோ என்னவோ, சர்க்காராலோ, ஏராளமான பணம் வைத்திருக்கும் வேறு எந்த அமைப்புகளாலோ சாதிக்க முடியாத பல காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கும் இந்த அருமையான அமைப்பு, அவ்வளவு விளம்பரப் படுத்தப்படாமலிருக்கிறது.



பேராசிரியர் பேசுகிறார்.

சென்னை மாணவர் மன்றம் என்ற இந்த அமைப்புத் தோன்றி இப்போது இருபத்திரேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த இருபத்திரேழு ஆண்டும் அது செய்துள்ள பணியைத் தமிழகத்தில் இதுவரை யாரும் செய்ததில்லை.

1931-ஆம் ஆண்டு மன்றம் துவங்கியது. அப்போது அதன் உறுப்பினர் பள்ளியில் பயிலும் நான்கு மாணவர்கள். இப்போதோ, தமிழகமெங்கணும் உள்ள பேரறிஞர்கள், பெரும்புலவர்கள், பேராசிரியர்கள் அதன் உறுப்பினர்களாய் இருப்பதில் பெருமை அடைகிறார்கள். அருகு போல் வேரூன்றி, ஆல்போலத் தழைத்துள்ள அமைப்பு அது.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்துத் தமிழ், தமிழ்நாடு, தமிழர் முன்னேற்றம் கருதி உழைத்தல்.

சின்னஞ் சிறு குழந்தைகளிடம் உள்ள கலையுணர்வைத் தூண்டப் பல வகையிலும் பாடுபடுதல்.

ஆரம்பப் பள்ளி முதல் கல்லூரி வரை பயிலும் மாணவர்கள் கதை, கட்டுரை, நாடகம், கவிதை, கையெழுத்து முதலிய பல துறைகளிலும் சிறந்து விளங்க ஊக்குதல்.

அரசாங்கப் பொதுத் தேர்வுகளுக்கு உதவியாக, ஆரம்பப் பள்ளி முதல் கல்லூரி வகுப்புவரை தமிழ்ப் போட்டித் தேர்வுகள் நடத்தி மாணவர்கட்குப் பரிசுகளும், நன்மதிப் பிதழ்களும் அளித்து ஊக்கப்படுத்துவதன் வாயிலாக அவர்கட்குத்தக்க பயிற்சி அளித்தல்.

சொற்பொழிவுகள், வெளியீடுகள், நூல் நிலையம், இலக்கியச் செய்தித்தாள் இவை நடத்தி, அறிவுப் பணி புரிதல்.

—ஆகிய அரும்பெரும் கொள்கைகள் கொண்டு, மன்றம் பணி புரிகிறது.

ஆண்டுதோறும் மன்றம் தமிழ்த் தேர்வு நடத்துகிறது. அதிலே எல்லா ஆரம்ப, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். பரிசும், பாராட்டும் பெறுகிறார்கள்.

இவர்களின் தொகை எவ்வளவு என்கிறீர்கள்? சுமார் முப்பதாயிரம்!

கதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, நாடகப் போட்டி, கையெழுத்துப் போட்டி, ஓவியப் போட்டி இன்னும் எத்தனையோ போட்டிகள் மாணவர்களின் ஆர்வத்தை வளர்க்க நடத்தப் படுகின்றன.

நல்ல சிறுகதை எழுத்தாளர்கள் இந்தப் போட்டிகளில் உருவாகி இருக்கிறார்கள்.

கட்டுரையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.



டாக்டர் எஸ். தருமாம்பாள்

இளங் கவிஞர்கள் பிறந்திருக்கிறார்கள்.

மணி மணியான கையெழுத்துகள் கிடைத்திருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, அற்புதமான ஓவியர்கள் பிறந்திருக்கிறார்கள்.

**திருத்தம்**

இந்த இதழ் 'எண்ண'த்தில் 20-வது வரியில் 'அக்கறை' என்றிருப்பது **அக்கரை** என்றிருக்க வேண்டும். 2-வது கலத்தில் 23-வது வரியில் **கும்பாபிஷேகம்** என்றிருப்பது, **கும்பாபிஷேகம்** என்றிருக்க வேண்டும். 35-வது வரியில் **முதலாளியின்னவர்** என்றிருப்பது **முதலாளியின் வைரி** என்றிருக்க வேண்டும். 54-வது வரியில் **பொறுப்புக்கு** என்றிருப்பது **வெறுப்புக்கு** என்றிருக்கவேண்டும். அச்சுப் பிழைகளுக்கு மன்னிக்க.

'நடமாடும் எதிர்காலம்' என்பார்கள் மாணவர்களை. அந்த நடமாடும் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது தெரிய வேண்டாமா? அந்த எதிர்காலம் நலமும், வளமும் நிறைந்ததாகத் திகழ வேண்டாமா?

— 11ம் பக்கம் —



புலவர் கோ. வில்வபதி



புலவர் தணிகை-உலகநாதன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 5 ‖ 20—9—58 ‖ இதழ் 14

## எட்டையாபுரம் கூத்து!

30 கார்கள் பவனி!

100 கலைஞர்கள் பயணம்!

3 மந்திரிகள் வருகிறார்கள்!

4 இடங்களில் சாப்பாடு!

2 நாட்கள் 'விழா'!

100000 மக்கள் 'வரக்கூடும்'!

—எதையெதைச் சொல்லி, நம்மைச் சிலர் கேலி செய்தார்களோ அதையெல்லாம் செய்து இரண்டு நாட்கள் கூத்து நடந்திருக்கிறது, எட்டையாபுரத்தில்!

நடிகர்களைக் கொண்டு கூட்டம் திரட்டுவதாக நகையாடிய, மந்திரிகள் என்னும் 'உயிர்வர்க்கங்கள்' அப்படித் திரட்டப்பட்ட கூட்டத்திலேதான் பேசியிருக்கின்றன.

நூறு நடிகர்களைக் காட்டித் திரட்டப்பட்ட லட்சம் மக்கள்!—ஆமாம்; நாம் இரண்டு நடிகர்களைக் காட்டித் திரட்டும் அதே அளவுதான்!—

நூறு பேரிலும் பல்வேறு 'முகபாவங்கள்'! எல்லோரும் ஒரே கொள்கையை உடையவர்கள் அல்ல! பெரும்பாலோரின் ஒரே கொள்கை, நம்மீது பொறாமை கொண்டதுதான்!-இந்த வேடிக்கையை எட்டயாபுரத்தில் கூடிய மக்கள் உணர்ந்திருப்பார்கள்!

பொதுவாகவே, அரசியல் கட்சிகள் இப்போது நடிகர்களுக்கு வலை வீசுவதில் அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளன. தி. மு. கழகம், கொள்கைக் கவர்ச்சியால் சில நடிகர்களை ஈர்த்துக்கொண்டதிலிருந்து, பதவிக்கவர்ச்சியால் சிலரை ஈர்த்துக்கொள்ள காங்கிரஸ்காரர்கள் முயன்றார்கள். நடிகர் என்ற முத்திரையுடன் 'யார்' கிடைத்தாலும் போதும் என்கிற அளவுக்கு இது வளர்ந்தது. அதாவது, ஆதித்தன் ஒரு 'புலித்தேவ'னைப் பிடிப்பது வரை! இது தவறு என்று நான் சொல்லமாட்டேன். நடிகர்கள் ஒன்றும் கழிபட்ட பொருள்களல்ல, கவனிக்காமலே விட்டுவிட. அவர்களிலேயும் இலக்கிய ஆசைபடைத்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களைக் கொண்டு 'வேறு சில'ரை மடக்கிவிடலாம் என்று சிலர் கணக்கிடுகிறார்களே அந்த ஆபாசத்தைத்தான் நான் குறிப்பிட வருகிறேன்.

அப்பட்டமாகச் சொல்வதானால், இந்த நோக்கத்தில்தான், தலைசிறந்த நடிகர் ஒருவருக்கு, காங்கிரஸ்காரர்களும் பிறரும் இருவேறு கோணங்களிலிருந்து வலைவீசுகிறார்கள். அவர் இத்தகைய வலைகளிலெல்லாம் சிக்கக்கூடியவர் அல்ல என்றாலும், இந்தக் காரியத்தைப் பகிரங்கமாகச் செய்யும் அரசியல் வாதிகளின் அசிங்கமான போக்கைக் கண்டு சிரிக்காமலிருக்க முடியவில்லை. இவர்கள், தங்களுக்கென்று சொந்தமாக எந்த மரியாதையும் இல்லை என்பதை வெளிப்படுத்திக்கொள்கிறார்கள். நடிகர்களை இழுத்தாலொழியப் பொதுமக்கள் ஆதரவு தங்களுக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்கிறார்கள்.

சென்ற ஆண்டு நடந்த பாரதி விழாவில் இதே மந்திரிகளும் சில தலைவர்களும் கலந்துகொண்டார்கள். அப்போது இவர்களைச் சிந்துவதற்கு எட்டையாபுரத்தில் நாதி இல்லை. இப்போது கூடிய கூட்டம் முழுக்க முழுக்க நடிகர்களுக்காகக் கூடியதே தவிர, இந்த மந்திரிகளுக்காகவோ கலந்துகொண்ட சில தலைவர்களுக்காகவோ வந்த கூட்டமல்ல. இதை மதுரை பாரதி விழாவில் உடனேயே இதே மந்திரிகள் கண்டார்கள். மதுரை விழா 'பாவ'மாக இருந்ததாம்!

வாழ்க நடிகர்கள்!
'பாவம்' தலைவர்கள்!
நிற்க.

இந்த பாரதி விழாவில் கலந்துகொண்ட பேச்சாளர்களில் சிலரைத் தவிர, மற்றவர்களுக்கு 'நப்பனை' பாரதியைப்பற்றி எதுவும் தெரியாது'!

தத்துவ பூர்வமாகப் பாரதியை அலசிப் பார்க்கக்கூடியவர்கள் யாரிருந்தார்கள், அங்கே? ஜீவானந்தத்தையும், ம. பொ. சியையும் தவிர, மற்றவர்கள் எவ்வளவு தூரம் பாரதியைக் கற்றவர்களோ, அது அந்த பாரதிக்கே வெளிச்சம்.

நிதியமைச்சர் மதுரையில் பேசிய பேச்சில், "பாரதி, பாரத சமுதாயத்தின் ஒற்றுமையை வேண்டினான். இவர்கள் பிரிவினை கோருகிறார்களே" என்று நம்மைச் சாடுவதற்கு பாரதியைப் பயன்படுத்திக்கொண்டார். அவர் ஒன்றை அறிவாரோ, என்னவோ! பாரதியை எந்தக் கொள்கைக்காரனும் தன் பக்கம் இழுத்துக்கொள்ளலாம். அத்தகைய 'குறை விசேடம்' பாரதியின் கவிதைகளுக்கு உண்டு. அதனால், "இதைச் சொல்லிவிட்டான் பாரதி; இதுவே முடிந்த முடிவு!" என்று எவனும் முத்திரை போடுவதற்கில்லை. பாரதி சொன்னதற்காக, பாரத சமுதாயம்-ஏக இந்தியா-இவையே 'நிரந்தரம்' என்று கொண்டால், "தனியொருவனுக்குணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்" என்றானே பாரதி, அதற்கேற்ப எந்தக் குண்டைப் போட்டு இந்த சகத்தை அழிப்பது?

> "தெய்வம் பலப்பல சொல்லி—பகைத்
> தீயை வளர்ப்பவர் மூடர்" என்றான் பாரதி.

அப்படிப் பார்த்தால், பல கோயில்களுக்கும் கும்பாபிஷேகங்களுக்கும் அலைந்துகொண்டிருக்கும்,

காமராஜர்—மூடர்,
சுப்பிரமணியம்—மூடர்,
பக்தவத்சலம்—படுமூடர்!

எங்கே இழுத்தாலும் பாரதி வருவான். பொது உடமையா?, தனித் தமிழ்நாடா?, ஏக இந்தியாவா?, அகிம்சையா?, பலாத்காரமா?-எதற்கும் பாரதி கவிதைகளில் மேற்கோள் கிடைக்கும். அவனது ஒவ்வொரு கவிதையும் கால ஓட்டத்தின் ஒவ்வொரு படிக்கல்—அவை யாவும், 'இன்பத் தமிழ்' என்னும் மொழிப் பொது மண்டபத்தில் சேருபவை.

முதல் படியில் ஆஸ்திகனை அணைக்கிறான்.
இரண்டாவது படியில் நாத்திகனாகிறான்.
மூன்றாவது படியில் முதலாளியின்னவர்!
நான்காவது படியில் நாட்டின் விளக்கு!

—படியேறித் தமிழாண்டவன் அவன். அவனது பாதை, ஒன்றேயல்ல. அது குழப்பமானதும் அல்ல. இதையறியாத நிதியமைச்சர் (பாவம்! இவர் கல்விக்கும் அமைச்சர்) பாரதியைக் காட்டி, ஏமாளித்தனமான ஒற்றுமைக்கு மக்களை அழைக்கிறார்.

இப்படியே, எட்டையாபுரத்தில் தோழர் டி. கே. சண்முகமும் தன் தலைமை உரையில் நடந்திருக்கிறார்.

"பொய்மை சேர்மதியினில் புலைநாத்திகம் கூறுவோர்" என்று நாத்திகர்களை பாரதி கண்டிக்கிறானாம். அதனால் "கடவுள் நம்பிக்கை அழிந்தால் கலைகள் அழி"யுமாம்! எப்படி இவர்களெல்லாம் ஒரு கவிதையைக்கொண்டு முழுக் கவிஞனின் கொள்கையை முடிவுகட்டுகிறார்களோ, புரியவில்லை. 'நாத்திகன்' என்பவனுக்கு இவர்கள் எந்த விளக்கம் கொடுத்தாலும் அது பாரதிக்கும் பொருந்தும்! பாரதி நாத்திகனுக்கு நாத்திகனே! அவனும் பொய்மை சேர்மதியினனே! புலைநாத்திகம் கூறியவனே!

எட்டையாபுரம் பேச்சுக்கள் பலவும், ஒவ்வொருவரும் பாரதியின் நெஞ்சில் தத்தம் கொள்கைகளையே அதிகமாகத் திணித்ததைத்தான் காட்டுகின்றன.

இது பாரதிக்குச் செய்யும் தொண்டு அல்ல. வெறும் விளையாட்டு! தங்கள் பக்கம் சிலரை இழுக்க ஆடப்படும் சதுரங்கம். பலரது பொறுப்புக்குப் பாரதியை ஆளாக்கும் 'அரசியல்'!

இந்தக் கூத்துக்களைத்தான் ஒவ்வொரு கவிஞன் பெயராலும் தமிழ்நாடு நடத்துகிறது.

பாரதி இருந்தானோ செத்தானோ, எட்டையாபுரம் கூத்து ஏராளமான நடிகர்களை தரிசனம் செய்யும் பாக்கியத்தை மக்களுக்குக் கொடுத்தது!

வாழ்க நடிகர்கள்!
'பாவம்' பாரதி!

**கண்ணதாசன்**



# புறப்படு நீ, போவோம்!

"தேன்சிந்தும் தாமரையே! தெற்குத்
திராவிடத்தின் முத்திரையே! முத்தே!
மான்தங்கும் மதியத்தில் பூத்த
மலர்க்கொத்தோ உன்உடம்பு? இல்லை,
வான்எங்கும் முகில்கிழிக்கும் மின்னல்
வரைகின்ற ஒளிக்கோடோ? யாதோ!
ஏன்இந்த வாய்மௌனம்? கண்ணே!
என்னைப்பார், உதடுதிற, பேசு."

"மீன்கொத்தி வட்டமிடும் தண்ணீர்
மேல்தளத்தில் துள்ளுகின்ற மீன்போல்
நான்நிற்க, என்உள்ளம் துள்ளும்
நாணவிழி பேசாமல் பேசும்
ஏன்இதனை நீர்அறிய வில்லை?
எடுத்துரைக்க நானென்ன ஆணு?
மீன்கொத்தி கண்குருடு ஆனல்
மின்னும்மீன் தனைப்பழிக்க லாமா?"

"கண்குருடு எதனலே? காதல்
கருக்கிருட்டுப் போதையினுல் தானே?
பெண்ஒருத்தி நீதாண்டி! இந்தப்
பேருலகில் ஓரழகுச் சிற்பம்!
மண்எதற்கு? பொன்எதற்கு? மன்னர்
மணிமகுடம் எனக்கெதற்கு? வா,வா
கண்கலந்து, மனங்கலந்து, வாயின்
கனிகலந்து நிலைமறந்து போவோம்!"

"நிலைமறந்து தொழில்துறந்து நின்ருல்
நிந்திக்கும் இவ்வுலகம் நம்மை.
விலைஉண்டு பொருளுக்கு! விற்கும்
வணிகர்க்குக் கணக்குண்டு! வட்டி.
வலைஉண்டு; கொலைஉண்டு! ஐயோ!
வாழ்க்கைஒரு சூதாட்டம்; வெட்டித்
தலைஅறுக்கும் போராட்டம்! அங்கே
தனைஉணர்தல், தொழில்புரிதல், வேண்டும்!"

"பாழ்பட்டுப் போகின்ற வெள்ளிப்
பணம்எதற்கு? நமக்கெதற்கு? தூ,தூ
வாழ்க்கைஒரு சுடுகாடு! மக்கள்
வாய்பிளக்கும், சிறுநரிகள்; நாய்கள்;
தாழிட்ட வீட்டுக்குள் தட்டுத்
தடுமாறிச் சுற்றுகின்ற ஈக்கள்;
விழட்டும், சாகட்டும், செத்து
வேகட்டும், போகட்டும், பேய்கள்!"

"குருளையைப்போல் சிறுவதில் சற்றும்
குணமில்லை; மணமில்லை, அத்தான்
பொருளின்றேல் வாழ்வேது? சொல்வீர்.
பொன்னின்றேல் நகையில்லை அன்ருே?
பொருளில்லா மாந்தரெலாம் மண்மேல்
பொறுமியழும் குரல்கேளும், கேளும்!
உருள்கின்ற கற்பனையை விட்டு
உலகத்தைக் கண்திறந்து பாரும்!"

"எற்றுக்கு இவ்வழுகை? ஏடி.
எனைத்தொடர்ந்து புறப்படுநீ! சூடு
பற்றுகின்ற அந்திவானை நோக்கிப்
பறப்போம்நாம்; மிதப்போம்நாம்; வாடி!
முற்றியதீந் தமிழ்க்கவிதை, முல்லை
முறுவலிக்க நீதருமோர் முத்தம்
பெற்றுவிட்டேன் அதுபோதும்; போதும்!
புறப்படுநீ, நாம்போவோம்; போவோம்!"

"பகலெல்லாம், இரவெல்லாம், காலைப்
பொழுதெல்லாம், மாலையெல்லாம் என்றும்
சுகம்பெறுமோர் கற்பனையாய், கண்கள்
சுழன்ருடும் கனவுலகாய், தேனுய்,
நகைக்கின்ற பூக்காடாய் மாற,
நாம்பறப்போம்; நாம்பறப்போம்; வா,வா
பகைக்கின்ருர் அங்கில்லை; இல்லை!
புறப்படுநீ நாம்போவோம்; போவோம்!"

★ வல்லம்-இரா. வேங்கடபதி ★

# நடமாடும் நூற்பட்டி!

அவள் பெயர் விர்ஜினியா கிர்குஸ்! அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன்ருன நியூயார்க் இராஜ்யத்திலுள்ள வாஸர் கல்லூரி மாணவி. அவளோடு படித்தவர்கள் நல்ல நூல்கள் படிக்க விரும்பினுல் நூலகப்பட்டியைப் பார்ப்பதில்லை. கிர்குஸ்தான் வழிகாட்டி. அவளைத்தான் கேட்பர் விவரங்கள்.

அவளும் மகிழ்ச்சியோடு நல்ல நூல்களின் விவரம் சொல்வாள். அந்தக் குறிப்பிட்ட நூல் எம்முறையில் சிறப்பானது என்று விளக்குவாள். அது மற்றைய நூல்களோடு எப்படி ஒப்புகிறது அல்லது வேறுபடுகிறது என்றும் சொல்லுவாள்.

கொஞ்ச காலத்தில் நடமாடும் நூற்பட்டி என்று பெயர் பெற்றுவிட்டாள்.

அதன் பின்னர் மக்கால் பத்திரிகையில் பணி கிட்டியது. மகளிர் பகுதித் தலைவியானுள். பெண்களிடமிருந்து வரும் ஆயிரக் கணக்கான முடங்கல்களை பொருளடக்கங்களை - காண வாய்ப்பேற்பட்டது. அது மக்களின் - சிறப்பாக மகளிரின்-மனப் பண்புகளை அறிய வசதி செய்தது. பத்திரிகையின் பல்வேறு பகுதிகளும் எத்தகைய விளைவு-மனமாற்றம்-மனவளர்ச்சி-ஏற்படுகிறது என்றறிய முடிந்தது. அதுபோலவே நூல்களைப் படிப்பதால் மக்களின் வெறும் மனப்பாங்கறிய உதவியது.

கொஞ்ச காலம் கழித்து ஒரு பெரிய பதிப்பகத்தில்-சிறுவர் பகுதியில் பணியாற்ற இடம் மாறினுள். ஆண்டு சிறுவர்களின் ஆவல்கள், மனத்திட்ட நுட்பங்கள் முதலியன அறிய வாய்ப்பேற்பட்டது.

இதற்கிடையிலே நாட்டிலுள்ள பல்வேறு நூலகங்களைக் காணும் வாய்ப்பும், பதிப்பகங்களோடு உறவாடி வணிக நிலையறியும் வேலையும் சொற்பொழிவாற்ற வசதியும் கிட்டின. கிர்குஸின் அறிவும், நூற்களை மதிப்பிடு மாற்றலும் பெருகின.

அடுத்து ஐரோப்பியச் சுற்றுப்பயண வாய்ப்பு கிட்டியது. படித்தவர் கருத்தும் பாடுகிறவர் வாயும் சும்மாயிருக்காதாம்!

பயணம் முடிந்து தாயகம் திரும்பும்போது ஒரு புதிய எண்ணம் தோன்றியது. பதிப்பாளர்கள், நூற்விற்பனையாளர்கள், நூலகங்கள், வாசகர்கள் ஆகிய நான்கு பகுதியினரும் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றினுல் நூலுணர்வு வளர ஏதுவாகும் என உணர்ந்தாள்.

அந்த எண்ணம் செயற்படத் தொடங்கியது. பயணத்திடையே கப்பலிலிருந்தவாறே இருபத்தி நான்கு நூற்பதிப்பாளர், விற்பனையாளர்களுக்கு, தன் கருத்தை வெளியிட்டு முடங்கல்கள் தீட்டினுள். அதன்படி நூற்கள் வெளியாகு முன்பே விவரமறிந்த ஒருவர் அவைகளைப் படித்து தராதரத்தை வெளியிட்டால், நூற்கள் தரமறிந்து மக்கள் வாங்கிப் படிக்கஏதுவாகும். மக்கள் பலன் பெறுவர். அதன் மூலமாகப் பதிப்பாளர்களும் விற்பனையாளர்களும் பயன் பெறுவர். இந்தப் பணியை தனது அனுபவ அடிப்படையில் செய்வதாக எடுத்துக் காட்டியிருந்தாள்.

இந்தக் கருத்தை ஆமோதித்து இருபத்திமூன்று நிறுவனங்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தருவதாக உறுதி கூறின.

1933-ம் ஆண்டிலே நூற்கள் மதிப்பிடும் வேலை தொடங்கியது. ஆரம்பக்கட்டத்தில் இந்த வேலைக்கு பத்து நிறுவனங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர்.

அந்த நிறுவனங்கள் நூற்கள் வெளியிட நிர்ணயிக்கப்படும்காலத்திற்கு இரண்டு திங்கள்களுக்கு முன்னரே நூற்களை இவருக்கு அனுப்பி வைக்கும்.

கிர்குஸ் அவைகளையெல்லாம் படித்து மதிப்பீடு எழுதி அனுப்புவாள். அத்துடன் ஏறத்தாழ ஒவ்வொரு நூலும் எத்தனை படிகள் விற்கக்கூடும் என்றும் முன்னறிவிப்புத் தந்தாள்.

அடுத்த ஆண்டு ஐம்பத்திரண்டு நிறுவனங்கள் உறுப்பினராயின. ஏறத்தாழ ஓராண்டில் ஆயிரம் நூற்களைப் படித்து மதிப்பீடு வெளியிட்டாள்.

அவள் சொல்லிய கருத்துக்களும் போக்குகளும் உண்மையாயின. உறுப்பினர்கள் அதிகமாயினர். வேலை அதிகமாயிற்று.

கலை, சமயம்பற்றிய நூற்களை, அத்துறையில் துறை போயவர்கள் மதிப்பீடு செய்ய வழி வகுத்தாள்.

தற்போது ஏறத்தாழ இரண்டாயிரம் உறுப்பினர்கள்-நூற்பதிப்பகங்கள், நூற் விற்பனையாளர்கள், நூலகங்கள், தொலைக் காட்சி நிலையங்கள்-இதில் அங்கம் வகிக்கின்றனர்.

கிட்டத்தட்டஒருவர்ஒருநாளைக்கு இரண்டு நூற்கள் வீதம் மதிப்பீடெழுதி 'மாதமிரு முறை மதிப்பு விளக்கங்கள்' வெளியாகின்றன.

இந்த விளக்கங்கள் நூற்களின் எண்ணிக்கையையும் பொருளையும் பொறுத்து சிறிதாகவோ பெரிதாகவோ வெளியாகின்றன. கலை, சமயம்பற்றிய நூற் மதிப்பீடுகள் மூன்று திங்களுக்கொரு முறை வெளியாகின்றன.

இவ்வளவு சிறப்பான பணி எங்ஙனம் நடக்கிறது?

வாசகர் வாசகராகப் படித்துக் கருத்து அறிவிப்பதே இதன் தத்துவமும் அடிப்படையுமாகும். ஒவ்வொரு நூலையும் பகுதி பகுதியாகப் பிரித்துப் படித்தாய்ந்து ஆதாரப் பூர்வமாக பொருள் முடிவு கொள்ளப்படுகிறது. நூல் சிறப்புடையதாயின் எங்ஙனம் சிறப்புடையது என்றும்குறைபாடுடையதாயின் எப்படி குறைபாடுற்றது என்பதும் விளக்கப்படுகிறது. ஒவ்வொரு நூலும், அத்துறை சார்ந்த பிற நூல்களோடு ஒப்பிடப்படுகின்றன. பெயர் பெற்ற ஆசிரியர் எழுதியதென்பதாலோ அல்லது சிறப்புற்ற பதிப்பாளர் வெளியிட்டதாலோ அந்த நூலின் தரம் பாதிக்கப்படுவதில்லை.

அந்த விளக்கங்கள் நடு நிலைமையாளரனைவராலும் போற்றப்படுகின்றன. மதிப்பிட்டாளர்கள் எடுத்துக் காட்டியவண்ணமே படிகளும் விற்பனையாகின்றன. நூற்றுக்கு எண்பது பகுதி இந்த ஊகங்கள் உண்மையாயிருக்கின்றன என்று பதிப்பாளர்களும் விற்பனையாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

அதுபோல நமது நாட்டிலும் ஒரு விர்ஜினியா கிர்குஸ் அம்மையார் நாலடுக்கு மாளிகையில் நான்கு உதவியாளர்களோடு பணி புரியாது போனுலும் இத்துறையில் ஒரு தொடக்க முயற்சி செய்ய முடிந்தால்...?

—வே. தில்லைநாயகம், எம். ஏ.

**கவிதையல்ல - சிதறிய சிந்தனை**

# சிவாஜி கணேசன்

வெள்ளத் தனைய உள்ளத் துணர்ச்சியின்
விளக்கம் முகத்தில் வளர்ப்பது நடிப்பு!
தெள்ளத் தெளியத் தெரிந்ததைக் கூடச்
சிறப்புறக் காட்டுதல் கலைஞனின் சிறப்பு!
நல்ல கலைஞன் நடிப்பினைப் பார்ப்பது
நாற்பது பள்ளிப் படிப்பினும் மதிப்பு!
கணேசன் நல்ல கலைஞன் என்பதைக்
கன்னித் தமிழர் அனைவரும் அறிவர்!
பகைவ னாக நினைப்பவர் தமையும்
பாடிப் புகழ்தல் பகைமையின் பெருமை!
நானவன் திறத்தை எடுத்துக் கூறி
நாட்டினர் அறிதல் கேலியாய் முடியும்!
அண்ணா சொன்னார்: "கணேச னுக்கு
ஆங்கில நடிகனும் அடுத்த படியே!"
தன்னோடும் வளர்ந்த தம்பி யல்லவா?
தாயின் உள்ளம் பேசிற் றங்கே!
உண்மை! கணேசன் நடிப்பின் சிகரம்!
உள்ளங் காட்டும் தெள்ளிய நடிகன்!
புதுப்புது முறைகள் வளர்க்கும் கலைஞன்
பொருந்தும் கலைக்குப் புதியவிஞ் ஞானி!
'சிங்கம் போன்றவன் சிவாஜி' என்று
ஜீவா னந்தம் சொன்னதைப் படித்தேன்!
செந்தமிழ் மறவர் குலத்தில் வந்தோன்
சிங்கமல் லாமல் சிறுநரி யாவனோ?
மலர்ந்து தழைத்து மணம்பரப் புவதில்
மல்லிகை மலருக் கன்னவன் உவமை!
சிரித்து மகிழ்ந்து சிலிர்க்க வைப்பவன்
தேன்போல் இனிக்கும் செம்மா துளையவன்!
சலவைக் கற்கள் சாத்திப் படைத்த
தங்க மண்டபம் போன்றவன், தோழன்!
"என்னடா தம்பி! அன்னவன் பெருமை
இப்படி உனக்குப் பெருக்கெடுக் கின்றது?"
என்பர் நண்பர்! இல்லை! இல்லை!
இத்தகு கலைஞன் என்பது உண்மை!

ஆனால்...

மாபெரும் கலைஞன் போகும் வழியைக்
கவலை யோடுநான் கவனிக் கின்றேன்!
அடிபட்டு நைந்து செல்வாக் கிழந்த
அரசியல் தலைவர்கள் அன்னவ னுக்கு
ஆசைகள் காட்டிப் புகழ்பல பாடி
மக்கள் மன்றத் திருந்து அவனை
வழிபிரித் தெடுத்துச் செல்கின் றார்கள்!
பாரதி விழாவை நடத்தவைத் தார்கள்
'பாரதி' என்றே பெயரிட் டார்கள்!
எந்த மனமும் புகழுரை களுக்கு
இரையா கும்இது இயற்கையின் சக்தி!
மக்களின் பகைவர் மந்திரி மார்கள்!
அவர்கள் புகழ்ந்தால் மக்கள் வெறுப்பர்!
சரியோ தவறோ தமிழகம் இந்த
உண்மையை நன்றாய் உணர்ந்தே உள்ளது!
மக்கள் இலையேல் கலைஞர்கள் இல்லை!
மக்கள் என்பது மந்திரி அல்ல!
மலரே யாயினும் முகர்வோர் இலையேல்
மலர்ந்துதான் என்ன, மணமிருந் தென்ன?
சிறந்த கலைஞன் நடிக்கும் மன்றில்
சிந்தை கனிந்து கூடிடும் மக்கள்
துறந்தவர் போலப் பேசுகின் றார்கள்
தூயஇவ் வுண்மையின் உட்பொருள் யாது?
எண்ண வேண்டும் என்பதற் காக
இதனைச் சொன்னேன் பிறிதொன் றில்லை!
இந்த மக்கள் பொல்லா தவர்கள்!
இப்படி அப்படி இம்மி அளவு
பெயர்ந்தான் எனினும் பேசிட மறுப்பர்!
தங்கள் பக்கம் சார்ந்த கலைஞன்
யாரா யினும்அவன் ஆகா யத்தில்!
மன்றம் வைப்பர், வாழ்த்துப் பாடுவர்
மாலைக ளிட்டு வரவேற் பளிப்பர்!
'உண்'டென் றவர்கள் மனது வைத்தால்
ஒவ்வொரு கலைஞனும் உச்சியில் நிற்பான்!
'இல்லை' என்றவர் கையை விரித்தால்
ஈடிலாக் கலைஞனும் நாடிலா மன்னன்!
இந்த உலகம் திறமையை மட்டும்
தனியாய்ப் பிரித்து மதிப்பதே இல்லை!
"திறமை பிறகு! எம்மொடும் உனக்குத்
தொடர்பு எவ்வளவு?"—இதுதான் மக்கள்!
சார்ந்த கொள்கையை விட்டு விலகித்
தனியாய் நிற்பதில் தவறே இல்லை!
ஆனால் இந்த மக்கள் கூட்டம்
அதையும் தமக்கோர் அவமெனக் கருதும்!
இந்த நிலையில் மந்திரி மார்கள்,
ஏற்ற முரைப்பது மாற்றங் காட்டும்!
கழகஞ் சார்ந்த ரசிகர்கள் மட்டுமே
மக்கள் எனநான் மதிப்பிட வில்லை;
அந்தக் கருத்திலும் பேசிட வில்லை!
அரசியல் அறியா மக்கள் கூட
கலைஞன் உறவை விழைகின் றார்கள்!
பாரதி விழாவை நடத்திய கலைஞர்
"அந்தப் பணத்தில் இரண்டொரு பள்ளிகள்
ஆக்கி யிருந்தால் நன்றா யிருக்குமே?"
என்று சிலபேர்—ஆமாம்; மக்கள்-
எண்ணுவ துண்மை! அவர்கள் கழகத்
தோழர் களல்லர்; 'வெறும்'பொது மக்கள்!
"கணேசன் செந்தமிழ்க் கல்லூரி" என்று
கட்டி யிருந்தால், யாரும் புகழ்வர்!
ஒருபுறம் வளரும் வெறுப்பைக் கூட
மறுபுற மதிப்பால் சமன்செய்து கொள்ளலாம்!
வெறுத்துப் பேச நினைப்பர் கூட
வாயை மூடி மௌனிக ளாவர்.
புத்தி சொல்வதென் வேலை அல்ல!
புகழுக் குரிய மாபெரும் கலைஞன்
வழியைச் சற்றுத் துடைத்துக் கொடுத்து
துப்புர வாக்கச் சொல்வதே யாவும்!
எந்த நாளிலும் மக்களுக் கான
எந்தப் பணியையும் எங்கிருந் தாலும்
செய்பவன் அவர்கள் சிந்தையிற் கடவுள்!
'எங்கிருந் தாலும் வளர்க நீ'என
இன்முகங் காட்டி உரைத்தார் அண்ணா!
வருக இங்கே, வருகவென் றழைத்து
வாசற் படிக்கு வரவே இல்லை!
நானும் அதையே கூற விழைகிறேன்!
எங்கிருந் தாலும் நண்பனே! உன்னை
ஏறிட் டொருமுறை பார்த்துப் பின்நட!
பின்னால் நிற்கும் தலைவர் களைவிட
முன்னால் நிற்கும் மக்கள் வலுவினர்!
கைதட்டு விழுவது கலைக்குத் தாளம்!
கைதட்டும் மக்கள் யாருக்கும் தேவைதான்!
அவர்கள் கையை அணைப்பதும் ஒருகலை!
அடித்து விலக்கிச் செல்வது துயர்நிலை!
திறமை மிகுத்த கலைஞனே! சற்றுத்
'திரும்பிப் பார்'உன் சிந்தனை மாறும்!

**கண்ணதாசன்**




பின்புறத் தோட்டத்திற்குச் சென்ருன் சிங்கத்தேவன். அங்கே அவன் கண்ட காட்சி, அவனது ஆத்திரத்தைப் பயமாக மாற்றியது. அங்கே கண்ணுத்தாள் கிணற்றின் கைபிடிச்சுவரின்மேல் ஏறி உள்ளே குதிக்கப்போனுள். 'கண்ணுத்தாள்!' என்று அலறிவிட்டான் சிங்கத்தேவன். பயம் மிகுந்த அலறலை ஆத்திரம் மிகுந்ததென நினைத்த கண்ணுத்தாள், பளிச்சென்று உள்ளே குதித்துவிட்டாள். சிங்கத்தேவன் மேனி புல்லரித்தது. மயக்கம் வந்துவிடும் போலிருந்தது. சமாளித்துக்கொண்டு, வேட்டியை வரிந்துகட்டி வேக வேகமாக கிணற்றுக்குள் தானும் இறங்கினுன். கண்ணுத்தாள் அங்கே தண்ணீருக்குள் தத்தளித்துக் கொண்டிருந்தாள். சிங்கத்தேவன் அவள் தலைமயிரைப் பிடித்து, மெதுவாகத் தூக்கி உட்புறத்துப் படிக்கட்டில் சாய்த்தான். பிறகு, ஒரு கையால் கயிற்றைப் பிடித்துக்கொண்டு, மறு கையால் அவளைத் தோளில் தூக்கிப்போட்ட வண்ணம் மேலே ஏறி வந்தான். உள் அறைக்குள் கொண்டுவந்து கிடத்தினுன். கல்லிலே மோதி தலை அடிபட்டு, இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. இரத்தத்தை முதலில் துடைத்து காயத்துக்குக் கட்டுப் போட்டான். பிறகு அவள் தலையையும், உடம்பையும் துவட்டினுன். அவள் இலேசாகக் கண்விழித்தாள். முதலில் ஆடைகளை மாற்றிக்கொள்ளச்செய்து, அவளைமீண்டும்படுக்க வைத்தான். சாம்பிராணிப் புகை போட்டான். இப்போது அவன் கோபம் எங்கேயோ போய்விட்டது. குழந்தையைக் கடிக்க வந்த புலி பால் கொடுப்பதுபோல், கொல்லும் காதிப்போடு வந்த சிங்கத்தேவன் காப்பாற்றும் கருணைக் கடலானுன். அவனுக எதுவுமே பேசவில்லை. அவன் கண்களிலும் நீர் ததும்பியது. 'என்னை மன்னித்துவிடுங்கள்; என்னை மன்னித்துவிடுங்கள்' என்று கதறியபடியே அழுதாள் கண்ணுத்தாள். 'உடம்பை அலட்டிக்கொள்ளாதே! இப்படியா அவசரப்படுவது? "அண்ணு" என்று கதறும்போதும் அவசரப்பட்டாய்; கிணற்றில் விழவும் அதே அவசரம் தான் தூண்டிற்று. பழிவாங்கத் தூக்கிவந்த என்னை, பண்புள்ள கணவனுக மாற்றும் அளவுக்கு பொறுமையும், தெளிவும் பெற்ற நீயா இப்படி அவசரக் காரியானுய்?' என்ருன் சிங்கத்தேவன்.

'கட்டுப்படுத்த முடியாத பாச உணர்ச்சி. வாய் திறக்கக்கூடாது என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன். அண்ணன் புறப்படும்போது எடுத்துவைத்த ஒவ்வொரு அடியும் என்னைத் தன்வய மிழக்கச் செய்துவிட்டது. எப்படிக் கத்தினேன் என்று எனக்கே புரியவில்லை.' என்ருள் கண்ணுத்தாள்.

'சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய உன் அண்ணன், உன்னைக் கண்டுபிடித்திருந்தால் என் கதி என்ன ஆகி இருக்கும்?'

'எனக்குப் புரிகிறது. நான் பயங்கரமான ஒரு தவறைச் செய்துவிட்டேன். இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று எப்போதும் நான் கருதியதில்லை. பாசத்தியில் கருகி, உருகி மடிய நேர்ந்தாலும், உங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டாள் கண்ணுத்தாள்; காட்டிக் கொடுக்கமாட்டாள்; காட்டிக் கொடுக்கமாட்டாள்!'

'நீ காட்டிக் கொடுப்பாய், என்று நான் சொல்லவில்லை. ஆனல், அறிவை உணர்ச்சி மழுங்கடிக்கும்போது, யாரும் தலைகீழாக மாறிவிடுகிருர்கள். நீ பெண். பெண், பிறப்பின் பலவீனப் பகுதி என்கிருர்கள் தத்துவஞானிகள். என்னதான் கையைக் கட்டிக்கொண்டு, வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தாலும், அண்ணனையோ, தம்பியையோ பார்த்துப் பேசமுடியாத சூழ்நிலை ஏற்படுமானுல், ஒன்று கோபம் வாழ்க்கைத் திசையை மாற்றும்; அல்லது சோகம் வாழ்வைக் கருக்கும். கோபம் உனக்கு வராது; எனக்குத் தெரியும். சோகம் உன்னை ஆட்கொண்டிருக்கிறது. அதை நான் எப்படி மாற்றப் போகிறேன்!'

'இல்லை; எனக்கு இப்போது எந்தவிதத் துன்பமும் இல்லை. எனக்கிருந்த ஒரே துயரம், நீங்கள் எங்கே என்னைத் தவருகப் புரிந்து கொள்ளப் போகிறீர்களோ என்பதுதான்!'

'இல்லை, இல்லை; அதைப்பற்றிக் கவலையே படாதே! நீ எனக்கு விரோதமாக வேண்டுமென்று எதையும் செய்வாய் என்று நான் கருதவில்லை. ஆனுல், எதைச் செய்ய வேண்டுமென்று தோன்றினுலும், இனியாவது உடனடியாகச் செய்து விடாதே. கொஞ்சம் நேரம் எடுத்துக்கொண்டு சிந்தனை செய்'

கண்ணுத்தாள் ஒரு பெருமூச்சு விட்டாள். சிங்கத்தேவன் அவள் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான். அவள் தலையைக் கைகளால் கோதினுன். அன்பொழுகக் 'கண்ணுத்தா' என்ருன். அவள் அவன் முகத்தையே பார்த்தபடி 'உம்' என்ருள். 'இந்நேரம் நீ இறந்து போயிருந்தால், நான் தன்னந் தனியனுக ஆகி இருப்பேன்' என்ருன் சிங்கத்தேவன். அவன் வாயைப் பொத்தினுள் கண்ணுத்தாள்.

கொடிய மனிதனையும் குழைய வைத்துப் பார்ப்பது உலகின் இயற்கை விநோதங்களில் ஒன்று. நல்ல மனிதன் இதயத்தில் மிருகத்தனம் புதைந்து கிடப்பதுபோல், கொடிய மனிதனின் இதயத்திலும் நல்ல பண்பு புதைந்து கிடக்கிறது. அதிர்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும் போது குணம் வேறுபட்டுத் தோன்றுகிறது. கண்ணுத்தாள் கிணற்றில் விழாமலிருந்திருந்தால், சிங்கத்தேவன் அவளை நடத்தும் விதம் வேருக இருந்திருக்கும். வார்த்தைகளால் அவனைச் சமாதானப்படுத்த வேண்டிய தொல்லை கண்ணுத்தாளுக்கு நேர்ந்திருக்கும். கோபத்தை தியாகத்தால் அணைக்க முடியும். ஆயிரக்கணக்கான வார்த்தைகளுக்கும், அடிதடிகளுக்கும் பிறகும் ஏற்படவேண்டிய அமைதி, கண்ணுத்தாளின் தற்கொலை முயற்சியால் அங்கே நிலவியது.

அவன் மடியிலே தலையை வைத்துப் படுத்திருந்த கண்ணுத்தாள், அவன் இடுப்பைச் சுற்றிக் கைகளைக் கட்டியபடி தூங்கவே ஆரம்பித்தாள். முழுக்க முழுக்க அமைதியில் ஆழ்ந்து ஓய்வு கொள்பவள்போல் காணப்பட்டாள். அவளது வனப்பு மிக்க மேனியைத் தடவிக் கொடுத்தபடி, தனக்குள்ளாகவே ரசித்துக்கொண்டிருந்தான் சிங்கத்தேவன்.

★

திருநெல்வேலியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வீரத்தேவனுக்கு நிம்மதியில்லை. கேட்டது கண்ணுத்தாள் குரல்தானு? ஆம்;

அந்த தொனியில் இருந்த அன்பு... சந்தேகமே இல்லை; கண்ணுத்தாள் குரல்தான்! சிங்கத்தேவன் வீட்டில் அந்தக் குரல் கேட்பானேன்? ஒருவேளை சிங்கத்தேவனே...? சேச்சே! இருக்காது! தங்கையைத் தூக்கிச் செல்லும் அளவுக்கா அவனுக்கு விரோதம் நம்மீது? என் தந்தையிடம் அவனுக்கு ஏற்பட்ட பகை என்னவென்றும் புரியவில்லையே?

திரும்பிப்போய்ப் பழையபடியும் சிங்கத்தேவன் வீட்டைச் சுற்றிப் பார்க்க நினைத்தான் வீரத்தேவன். ஆனால் வேறொரு எண்ணம் அவனைப் பின்னுக்கு இழுத்தது. நாம் தேடிப் பார்த்தும் கண்ணுத்தாள் அங்கு இல்லாமல் போனால், பிறகு எப்படி சிங்கத்தேவன் முகத்தில் விழிப்பது என்பதுதான் அது. அதனால் மீண்டும் அவன் திருநெல்வேலிக்கு நடக்க ஆரம்பித்தான். சிங்கத்தேவன் வீட்டிலேயே தொடர்ந்து தங்கினால், உண்மையைக் கண்டுகொள்ளலாம் என்கிற முடிவுக்கும் வந்தான்.

திருநெல்வேலி இளைஞர்களில் பெரும்பாலோரைச் சந்தித்தான். சிறை உடைப்பு அன்றைக்கு ஆயுதங்களை ஒளித்துவைக்கவேண்டிய முறை பற்றி அவர்களுக்குக் கூறினான். எல்லோரும் ஒரே மாதிரி வேடம் போட்டுக்கொள்ளக்கூடாது என்பதையும் எச்சரிக்கையாகச் சொல்லிவைத்தான். யார் யாருக்கு எது எது இயற்கையாக இருக்குமோ, அந்தந்த வேடங்களில் வரும்படி கூறினான். இவை அனைத்தையும் முடித்துக்கொண்டு, பாளையங்கோட்டைக்குத் திரும்புவதற்குள் பொழுது விடிந்துவிட்டது.



திரும்பி அவன் பாளையங் கோட்டை அருகில் வந்தபோது தான், பொம்மையா தப்பி ஓடி வருவது நடந்தது. மரங்களுக்கிடையே சென்றுகொண்டிருந்த பொம்மையா, வீரத்தேவன் நடந்து செல்வதைப் பார்த்து உற்சாகத்தோடு கைதட்டி, 'அண்ணுச்சி! அண்ணுச்சி!' என்று கூவினான். வீரத்தேவன் நின்று திரும்பிப் பார்த்தான். பொம்மையா வருவதைக் கண்டான். அவனுக்கும் உற்சாகம் பிறந்தது. பொம்மையா அருகில் ஓடி வந்தான். அவனைக் கட்டித் தழுவிக்கொண்டான் வீரத்தேவன்.

'என்னடா, எங்க சுற்றிட்டு வர்ரே? என்ன இந்த சிப்பாய் வேஷம்?' என்று கேட்ட வீரத்தேவன், பொம்மையா பதில் சொல்வதற்கு முன்பாகவே, 'ஓகோ! சிறைச்சாலைக்குள்ள பொயிட்டு வர்ரயா?' என்றான். பாதையிலே போய்க்கொண்டிருந்த சிலர் தங்களைக் கவனிப்பதைப் பார்த்த பொம்மையா, 'சூ! சத்தம் போடாதீங்க; வாங்க அந்த வரப்பில் உட்காருவோம்' என்று வீரத்தேவனை இழுத்துக்கொண்டு வரப்பில் போய் உட்கார்ந்தான். வீரத்தேவனும் அவன் அருகில் உட்கார்ந்தான்.

'ஆமா, நான் சிறைச்சாலைக்குள்ள போயிட்டு வந்த வேடிக்கையை அப்புறம் சொல்றேன். நீங்க முதல்ல எல்லாரையும் பார்த்திங்களா, என்ன ஆச்சுங்கிறதைச் சொல்லுங்க!' என்றான்.

'பார்த்தேன். இராத்திரிப் பூரா அதுதான் வேலை. மொதல்ல கடற்கரை நாயக்கரைப் பார்த்தேன். எட்டயாபுரத்திலிருந்து ஒரு நூறு பையங்க, இப்பவே திருநெல்வேலிக்கு வந்திட்டாங்க. அவங்களுக்கெல்லாம் சாப்பாடு போடுற விஷயமா, கடற்கரை நாயக்கர்'ட்டப் பேசி ஒரு முடிவு பண்ணிக்கிட்டேன். அவரும் போடுறதா ஒத்துக்கிட்டாரு. அந்தத் தொல்லை ஒழிஞ்சுது. அப்புறம் நேர சுப்பிரமணிய பிள்ளை வீட்டுக்குப் போனேன்...'

'யார், அவரு?'

'உனக்குத் தெரியாது. பொம்மு நாயக்கருக்குத் தேவைப் படும்போதெல்லாம் அவருதான் கடன் குடுத்து வந்தாரு. அவருகிட்ட ஒரு ஐயாயிரம் பூவராகன் கேட்டேன். முன்னலகூட பொம்மு நாயக்கருக்காக நான்தான் போயி அவருகிட்ட வாங்கிட்டு வருவேன். இப்ப நான் போய்க் கேட்டதும், ஆள் கொஞ்சம் ஏற எறங்கப் பார்த்தாரு. 'என்ன விஷயம்? எதுக்கு?'ண்ணு கேள்வி போட ஆரம்பிச்சாரு. உள்ளதை அவர்'ட்டச் சொல்லலாமா'ண்ணு ஒரு சந்தேகம் வந்துது. அப்படியா காட்டிக் குடுத்திடப் போறருண்'ற நம்பிக்கையில சொல்லிட்டேன். எனக்கு இன்னொரு தைரியம்கூட, அவர் மகன் ராமையாவும், மருமகள் லட்சுமியும் ஊமைத்துரைகிட்ட ரொம்பப் பிரியம் உள்ளவங்க. சுப்பிரமணிய பிள்ளை அப்படி ஏதாவது பணமும் குடுக்காம, நம்மைக் காட்டிக் கொடுக்கணும்னு நெனைச்சார்'ன, பையங்கிட்டச் சொல்லி பார்த்துக்கலாம்'ல. அதனலதான் உள்ளதைச் சொன்னேன். செறையை ஒடைக்கப் போறேமிண்ணு சொன்னனே இல்லியோ, அவர் செலையாச் சமைஞ்சிட்டாரு. அப்புறம் ஒரு வழியா அவரைச் சமாதானப்படுத்தி, இந்த ஐயாயிரம் பூவராகன் கெடைச்சா ஊமைத்துரை வெளியில் வந்து, பாஞ்சாலங்குறிச்சி ராஜா ஆகிறது நிச்சயம்'ணு சொன்னேன். பெரிய நாயக்கர் குடுத்த மாதிரியே வட்டியோட திருப்பிக் குடுத்திடறேன் அப்படிண்'ணதும் மனுஷன் சம்மதிச்சாரு. ஆனா ஊமைத்துரையோட கையெழுத்து வேணு மிண்ணுரு. எந்த நேரத்தில ஊமைத்துரை கையெழுத்தைக் கேட்கிருரு பாரு! என் கையெழுத்தில பாவிக்கு நம்பிக்கை இல்லை. நான் சலிச்சுப் போய் வெளியில வந்தபோது, அவர் மகன் ராமையா வந்தான். அவனைப் புடுச்சு வச்சிக்கிட்டு, ஒரு நாழிகை அழுதேன். உடனே அவன் ஒரு யோசனை சொன்னன். செறைச்சாலைக்குப் பின்புறத்தில உள்ள கோட்டையில ஒருசுரங்க வாசல் இருக்காம். அது வழியா செறைச்சாலைக்குள்ள போகலாமாம். அப்படிப் பொயிட்டு வர்ரதுக்குண்ணே கோட்டைக்குள்ள செல பேரு இருக்காங்களாம். அவங்களையெல்லாம் அவனுக்குத் தெரியுமாம்; நெறையப் பணங் குடுத்து வச்சிருக்கானும். அவங்க ஆள்மாதிரிப் போயி, ஊமைத்துரை கிட்டக் கையெழுத்து வாங்கிட்டு வந்திடறேன்; நீங்க ஒரு கடுதாசி குடுங்கோ'ண்ணன். குடுத்த, அதிகாலையிலயே அவங்களை அனுப்பிச்சுட்டேன். புருஷன் பெண்டாட்டி ரெண்டு பேருமே போருங்க. அந்தப் பொண்ணு ரொம்பக் கெட்டிக்காரியாம், சிப்பாய்களை ஏமாத்துறதில. இந்நேரம் கையெழுத்து வாங்கிட்டுத் திரும்பியிருப்பாங்க. எப்படியோ தம்பி, இந்த ஐயாயிரம் பூவராகனும் கெடைச்சாத்தான் நம்ம கையில வலு இருக்கிறமாதிரி.'


வீரத்தேவன் முடித்தான். பொம்மையா பதில் சொல்லாமல் பொம்மைபோலவே உட்கார்ந்திருந்தான். அவன் மூளை கிறுகிறுத்தது. ஒருவேளை, சுரங்கத்தில் நாம் அடித்துப் போட்டவர்கள் அவர்களாகத்தான் இருக்குமோ? ஆம்; அவர்களேதான்! ஐயய்யோ! காரியத்தைக் கெடுத்துவிட்டோமே!— பொம்மையா பதறி 'அண்ணே! அண்ணே!' என்று கத்தினன்,

'என்னடா? ஒங் கதையைச் சொல்லு!' என்றான் வீரத்தேவன்.

'அண்ணே! அண்ணே! நானும் சுப்பம்மாவைப் பார்த்துட்டு, அந்த சுரங்கப் பாதையை ஒடைச்சிட்டுத்தான் வந்தேன்...வழியில சுரங்கத்துக்குள்ள நீங்க சொல்றவங்கதான் போல்ருக்கு...ரெண்டு பேரு வந்தாங்க; அவங்களை அடிச்சுப் போட்டுட்டு, தீவட்டியால அவங்க மொகத்தைச் சுட்டுட்டு வந்திட்டேன்!' என்றான் பொம்மையா.

வீரத்தேவன் உடம்பு கொதித்தது.

'ஆ! ராமையாவையா? லட்சுமியையா...? அடப்பாவி! காரியத்தை நீயேவா கெடுக்கணும்? ஒம்மாதிரி ஆள்களையெல்லாம் வச்சுக்கிட்டு நான் எப்படி காரியத்தை நடத்தப் போறேன்! ஐயய்யோ! ராமையா என்ன ஆனன்னு தெரியலயே! அவன் மொகமும் கருகி, ரகசியமும் வெளிப்பட்டு, அவனுக்கு ஒதவி செஞ்ச கோட்டைக் காவலர்களும் பிடிபட்டு, எல்லாம் கெட்டுப்போயிடுமே!' என்று தலையிலடித்துக்கொண்டான் வீரத்தேவன். பொம்மையாவைக் கடுமையான வார்த்தைகளால் திட்டினன். இராமையாவையும், இலட்சுமியையும் நினைத்து அழுதே விட்டான் நிச்சயமாக இரகசியம் முழுக்க



வெளிப்பட்டுவிடும் என்று பயந்தான். கண்ணீர் வடிப்பதைத் தவிர, வேறு வழி எதுவும் பொம்மையாவுக்குத் தோன்றவில்லை.

'உன் காதல், நம் திட்டத்தையே பாழடித்து விட்டது. நீ என்கூட வராதே! நீயே போய்க் கும்பினியாரிடம் ரகசியத்தைச் சொல்லிவிடு. உதவிசெய்ய வந்தவர்களின் முகத்தைச் சுட்டதைவிட, அது நல்ல காரியம்!' என்ற வீரத்தேவன், பதிலுக்குக் காத்திராமல் வேகமாக நடந்தான்.

பொம்மையா அங்கேயே நின்று தலையிலடித்துக் கொண்டு அழுதான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல், சிறைச்சாலையின் பின்புறக் கோட்டையை நோக்கி நடந்தான். கோட்டை வாசலுக்கு எதிரே வந்தபோது, உள்ளேயிருந்து ஒரு கூட்டுவண்டி முழுதும் மூடப்பட்டு, வெளியில் வந்தது. ஒருவன் துணி மூட்டை ஒன்றைக் கையில் வைத்தபடி, அந்த வண்டியின் பின்னல் நடந்தான். வண்டியின் உட்புறத்திலிருந்து மெதுவாக அழுகுரல் வருவதை, பொம்மையா கவனித்தான். கோட்டைக்குள் செல்வதா, வண்டியைப் பின்தொடர்வதா என்று திகைத்தபடி நின்றான். ஒரு கிழவி கோட்டைக்குள்ளிருந்து வெளியில் வந்தாள். பொம்மையா சுரங்கத்திலிருந்து தப்பி ஓடியபோது பிடித்துத்தள்ளிய அதே கிழவி! அவள் பொம்மையாவைப் பார்த்ததும், 'இவன்தான், இவன்தான்; விடாதிங்க, பிடியுங்க; பிடியுங்க!' என்று கத்தினள்.

தொடரும்




பல முறைகள் வேடன்தாங்கல் சென்று ஆராய்ச்சி செய்தும் பறவைகளைப் பல்லாண்டுகளாக ஆராய்ச்சி செய்யும் கிராமவாசிகளைக் கேட்டும் என் ஆராய்ச்சிகளையும் உபயோகப்படுத்தி, 10-ம்தேதி, மார்ச்சு மாதம் 1956ல் "சுதேசமித்திரனில்" வேடன்தாங்கலைப்பற்றி நீண்ட கட்டுரை எழுதினேன். அதில் பறவைகளின் விதம், பெயர்கள் வரக் காரணம், இ. பி. 1796-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட பத்திரம் முதலியவைகளின் விவரங்களையும் எழுதினேன். அதில் அரசாங்கம் செய்ய வேண்டியது என்ன? என்ற தலைப்பின் கிழ், சில விஷயங்களை எழுதினேன். வேடன்தாங்கலைப்பற்றி இந்தியாவில் பிரசுரமாகும் இந்திய பாஷைகளிலும், ஆங்கிலத்திலும் எழுதிய நீண்ட கட்டுரைகளில் இதுவே முதல் கட்டுரை. அதில் செய்ய வேண்டியது என்ன? என்ற தலைப்பின் கிழ் எழுதி பிரசுரமான விஷயங்கள் ?

"ஆண்டு பூராவும் பறவைகள் தங்க வசதி செய்தால் பறவைகள் தங்குமா? என்ற கேள்வி உண்டாகிறது! இந்த வேடன் தாங்கல் ஏரியை நான் பார்த்த போது, பூராவும் நிறையவில்லை. கலங்கல் மட்டத்திற்கு சுமார் இரண்டடி குறைவாகவே இருந்தது. ஆனால் வளையபுத்தூர் ஏரியும் மதுராந்தகம் ஏரியும், பல மாத காலமாகப் பூர்ணமாக நிரம்பி, கலங்கல் வழியே உபரித் தண்ணீர் வழிந்து வீணாகிக் கொண்டிருந்தது. இவ்விதம் வீணாகும் தண்ணீரை, வேடன்தாங்கல் ஏரிக்குத் திருப்பி, ஏற்கனவே பறவைகளின் எருகலந்திருக்கும் வேடன் தாங்கல் ஏரித் தண்ணீருடன் சேர்த்து, அதனை மறுபடியும் மற்ற ஏரிகளுடன் கலக்கச் செய்தால், நல்ல எருக்களுடன் இதர நிலங்களுக்கும் பாய உபயோகமாக இருக்கும். இதன் மூலம் பறவைகளையும், அதிக மாதங்கள் வேடன்தாங்கலில் தங்கத் தூண்டலாம். மேலும், அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் வேடன் தாங்கலுக்குச் செல்ல நல்ல ரஸ்தாவும், இளைப்பாறும் விடுதிகளும், பறவைகளை ஆராய்ச்சி செய்ய நல்லதோர், உண்மையான "ஆராய்ச்சிக் குழு" ஒன்று இங்கு அமைத்தல் மிகவும் அவசியம். பெரிய வலை ஒன்று கட்டிச் சில பறவைகளைப் பிடித்து அவற்றின் காலில், "இந்தியா" என்ற தகடுகள் கட்டி, இந்த ஆராய்ச்சியாளர்கள் விட்டுவிட வேண்டும். சில பறவைகளைப் பிடித்து சென்னை மிருகக் காட்சி சாலையிலிருக்கும் குளத்தில் அவை தங்க ஏற்பாடுகள் செய்து அதன் மூலமும் ஆராயச்சி செய்யலாம். பத்திரிகைகளில் இவ்விடத்தில் வரும் பறவைகளைப்பற்றியும், நாம் எடுத்துக்கொண்டிருக்கும் ஏற்பாட்டின் நோக்கத்தைப்பற்றியும் விளம்பரம் செய்ய வேண்டும். இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான, இந்தியப் பறவைகளுக்குக் காலில் "இந்தியப் பறவை" என்ற தகடுகள் கட்டிவிட்டால், இன்னும்இரண்டாண்டில் எந்நாட்டுப் பறவைகள் இந்தியாவுக்கு வருகின்றனவென்றும், நம் நாட்டுப் பறவைகள் எந்நாடுகளுக்கு எக்காலங்களில் செல்கின்றனவென்றும் தெரிந்து கொள்ளலாம்"

என்று விளக்கமாக (1956) எழுதி உள்ளேன். இக்கட்டுரையை, "தமிழ்நேசன்" மலேயா 25-3-56 தினத் தாளிலும், சென்னை, மஞ்சரியிலும் பிரசுரம் செய்திருக்கிறார்கள்.

1956ல் எழுதிய முதல் கட்டுரையில் நான் கண்ட கனவுகள், இன்று நினைவாக; வேடன்தாங்கலில் பல வசதிகள் செய்ய அரசாங்கத்தார் ஏற்பாடுகள் செய்து இருக்கின்றனர்; என்பதை நினைத்து இன்பம் கொண்டேன். ஆனால், பறவைகள் சதா தங்குவதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்து பணச் செலவு செய்தால் அது வீணாகும் என்பதையும், மேலும் தங்குவதற்கு வேண்டிய இயற்கையான வசதிகள் செய்தால், கோடைக் காலத்தில் அவைகள் இங்கு தங்குமா? என்ற பல சந்தேகக் கேள்விகள் உண்டாகின்றன. ஆகையால் மக்கள் போக்கு வரத்துக்கு வேண்டிய நல்ல வசதிகள் செய்தால், அது வீணாகாது என்பது என் கருத்து. பல நூற்றாண்டுகளாக அக்கிராமத்து வாசிகளே, அந்த பறவைகளுக்கு இரவும் பகலும் நல்ல பாதுகாப்புக் கொடுத்து வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். பறவைகள் ஏராளமாக வந்துதங்கும் இந்தஆகஸ்டு மாதம் முதல், மார்ச்சு மாதம் வரையில். இந்த காலமே வேடன் தாங்கலைக் கண்டு களிக்க அருமையான காலம்.

—பிலோ. இருதயநாத்

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
போன்:6, சங்குபிள் ஸை.15, திண்டுக்கல்ரோடு, மதுரை •

# மதுரை எழுத்தாளர் மன்றம்

**— கண்ணதாசன் —**

'**வா**ளைவிட வலிமைமிக்கது பேனா' என்று சொல்லிப்போனான் புகழ்பெற்ற எழுத்து வேந்தன் வால்டேர். அந்தப் பேனாவைக் கையிலெடுத்துக்கொண்டு, தங்கள் இஷ்டத்துக்கு எழுதித்தள்ளும் ஒரு 'புத்திசாலி'க் கூட்டம் தமிழ்நாட்டில் உண்டு. அந்தத் திருக்கூட்டத்துக்குத் தமிழ் எழுத்தாளர்கள் என்று பெயர்.

அத்திம்பேரையும், அம்மாமியையும் இட்டுக்கொண்டு வந்து, இலக்கியத் தோட்டத்தில் நடமாட விட்டுக் 'கதை பண்ணு'ம் இவர்கள்தான் பேனாச் சக்கரவர்த்திகளாம்! இந்தச் சக்கரவர்த்திகளின் சாம்ராஜ்யத்தில் உள்வீட்டு விவகாரம் தவிர, வேறு எதுவும் இலக்கியமாவதில்லை. எல்லோருமே மூக்குமுட்டத் தின்றுவிட்டு, நேரத்தை ஓட்டுவதற்கு சிரமப்பட்டுக்கொண்டிருப்பது போலவும், அவர்களுக்கு என்று வெறும் காதல் விவகாரங்கள் தவிர வேறு எதுவும் பிரச்சினையாக இல்லாதது போலவுமே அவர்களுடைய அந்த எழுத்துக்களைப் படிக்கும்போது தோன்றும். அந்த அளவுக்கு நடப்பை மறைத்து, நடிப்பவர்கள் அந்த எழுத்தாளர்கள்.

ஏழையைப் பற்றி எழுதுவது.
இல்லாமையைப் பற்றி ஆராய்வது.
சாதி உணர்வுகளைச் சாடுவது.
சம்பிரதாயங்களை மாற்றப் போராடுவது.

—இவை எல்லாம் இவர்களால் தீண்டப்படாத விஷயங்கள். இவை எல்லாம் இல்லாத 'எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான' அப்பழுக்கற்ற ஒரு சமுதாயத்தில் ஜனனமெடுத்திருப்பதாகப் பிரலாபித்துக்கொள்கிறவர்கள் இவர்கள்!

இந்த'வில்லாதி வில்லர்கள்' தங்களுடைய மேதைத்தனத்தை வெளிச்சம் போடுவதோடுகூட நின்றுவிடுவதில்லை; உண்மையான ஆற்றல் அமையப்பெற்றுள்ள நல்ல எழுத்தாளர்களைப் பற்றி விமர்சனம் வேறு செய்யத் தலைப்பட்டு விடுகிறார்கள். அதைவிடப் பெரிய வேடிக்கை, அவர்களை எழுத்தாளர்கள் என்றே ஒப்புக்கொள்வதில்லை!

இந்தத் திருக்கூட்டத்துக்கு தமிழகத்திலுள்ள முக்கிய நகரங்களிலெல்லாம் எழுத்தாளர் சங்கம் என்ற திண்ணைக்கச்சேரிகள் உண்டு. அவற்றில் ஊருக்கு நால்வர் சேர்ந்துகொண்டு, 'எங்களை விட்டால் தமிழ் இல்லை; தமிழ் இலக்கியம் இல்லை' என்று யாராவது சிலரைக் கூட்டிவைத்துச் சொல்லிக்கொள்வது வழக்கம்.

இவர்கள்தான் தமிழ் எழுத்தாளர்கள் என்றும், எழுத்தாளன் என்பவனுக்குத் தரப்படும் பாராட்டும், பரிசும், பிறவும் இவர்களுக்கே தரப்படவேண்டும் என்றும் சொல்லிக்கொள்வதோடு மட்டுமல்லாமல், அதற்காக என்னவெல்லாம் முடியுமோ அவற்றையெல்லாம் செய்தும் வைத்திருக்கிறார்கள் இவர்கள். அரசாங்கத்தின் ஆதரவும் இவர்களுக்கு ஏராளமாக இருக்கிறது.

இவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட—சமுதாயத்துக்குப் புதிய வலிவும், பொலிவும் தருகிற நல்ல எழுத்தாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுடைய முறையான பணியே இன்றைய தினம் தமிழைத் தமிழாக இருப்பதற்கும், தமிழ் இலக்கியம் பிற தற்கால இலக்கியங்கள் வரிசையில் நிற்பதற்கும் பெரும் அளவில் உதவியிருக்கிறது.

ஆனால் அப்படிப்பட்டவர்களிடையே அம்மாமித்தமிழ் எழுத்தாளர் அமைப்புகளைப் போல் தனி அமைப்புகள் உருவாக்கப்படவில்லை; அதற்கென யாரும் முயற்சி எடுத்துக் கொள்வதில்லை.

இந்தப் பெருங்குறையை நிவர்த்திக்கும் எண்ணத்துடன் கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட அமைப்பே **மதுரை எழுத்தாளர் மன்றம்.** இந்த எழுத்தாளர் மன்றம் முற்றிலும் நல்ல தமிழ் எழுத்தாளர்களைக் கொண்டது; அதாவது, அம்மாமித் தமிழ் எழுத வராத எழுத்தாளர்களைக் கொண்டது.

அதனுடைய முதல் ஆண்டு விழா வரும் **28-9-'58** அன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் பலரும் விழாவில் கலந்து கொள்கிறார்கள். எனது தலைமையில் கவிஅரங்கம் ஒன்றும் அன்று நடைபெறவிருக்கிறது. அதில் கவிஞர்கள் முடியரசன், சாமி. பழனியப்பன் மற்றும் பலர் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

மதுரை எழுத்தாளர் மன்றம் நல்ல முறையில் வளர்ச்சியடைய வேண்டியது மிக மிக அவசியம். அதனுடைய வளர்ச்சி. நல்ல தமிழின் வளர்ச்சி; புதுமைக் கருத்துக்களின் வளர்ச்சி இதனை எண்ணி, அந்தப் பகுதியிலுள்ள எழுத்தாளர்கள் அனைவரும் செயல்பட வேண்டும். நமது வெண்பாப் போட்டியில் கலந்து கொள்ளும் அந்தப் பகுதி நண்பர்கள் அனைவரும் அந்த மன்றத்தில் உறுப்பினராகச் சேர்ந்து அதனை மேலும் பெரிய அமைப்பாக உருவாக்க ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**செயலாளர்,**
**மதுரை எழுத்தாளர் மன்றம்,**
**8, இராயகோபுரம் வடக்குச் சந்து,**
**எழுகடல் தெரு, மதுரை.**

# ★ அடிமைக் கூட்டம்! ★

2

இந்தியக் கம்யூனிஸ்டுகளின் வரலாறு வெளிநாட்டு ஆணைகளுக்கேற்ப அமைந்து விட்ட காரணத்தினுல் தான் அடிக்கடி தவறுகள் செய்துகொள்கிருர்கள். உடனே "திருந்திவிட்டோம், திருந்திவிட்டோம்" என்றும் சமாதானம் கூறுவதிலும் தவறுவதில்லை! தோழர் ஜெயப்பிரகாசரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட கம்யூனிஸ்டுகள் தங்களின் கட்சிப்பணியை மாற்றிக்கொண்டார்களா? ஆற்றல் வீரர்கள் என்று தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு அவர்களுடைய புதுடில்லித் தலைமைப் பீடத்தின் தகுதியற்ற தன்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். **"நமது இயக்கம் வளர்ந்துவிட்டது. நமது கடமைகள் பெருகிவிட்டன. ஆயினும் இதற்கேற்ற முறையில் நமது தலைமை - குறிப்பாக மத்தியத் தலைமையும் பெரும்பான்மை மாகாணங்களிலுள்ள தலைமையும் திறமையிலும் தகுதிப்பாட்டிலும், உறுதித்தன்மையிலும் வளரவில்லை. நமது வேலைமுறைகளும் அவற்றிலுள்ள குறைபாடுகளும் நமது பலவீனத்தை மேலும் அதிகப்படுத்திவிட்டன"** —அமிர்தசரஸ் வகுத்த வழியை அஜாய் கோஷ் இப்படி அறிமுகப் படுத்தியுள்ளார். இலாயக்கற்ற முறையிலேயுள்ள இந்தியக் கம்யூனிஸ்டுகளை வருங்காலம் பின்பற்ற வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுகிருர்கள். தலைமை சரியில்லையாம்! அந்தத் தலைமை எது? நமக்கெல்லாம் தெரியும்—அவர் அஜாய்கோஷ்தான்! அவர் இலாயக்கற்றவர். தகுதிபடைத்தவர் அல்ல என்ருல் கம்யூனிஸ்டுகள் வேருரு தலைமையைத் தேடிக்கொள்ள வேண்டியதுதான். தமிழ்நாட்டிலேயுள்ள ஜீவானந்தம் அகில இந்தியத் தலைமைக்கு ஏற்றவர்தான் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் ஏற்றுக் கொள்வோம்-- ஆனுல் அகில இந்தியாவிலும் இருக்கின்ற கம்யூனிஸ்டுகள்—அஜாய் இருக்கும் இடத்திலே தோழர் ஜீவானந்தம் அவர்களை ஏற்றுக்கொள்ள முன்வருவார்களா? தன்னுடைய தலைமை தகுதியற்றது என்ருல் ஏன் தோழர் அஜாய் குமார் கோஷ் இன்னும் பொதுச் செயலாளர் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்? தமிழ்நாட்டுக் கமிட்டியினர்-அமிர்தசரஸ் மகத்துவம் பற்றிப் பேசிப் பேசி மயக்கம் போட்டு விழ்ந்து கிடப்பவர்கள் தங்களுடைய அகில இந்தியக் கொள்கைக்கு ஒரு சவாலாகத் தமிழ்நாட்டிலிருந்து அகில இந்தியத் தலைமைக்கு ஒருவரை முன்மொழிந்து ஒரு நல்ல தகுதியான தலைமையைத் தயார் செய்ய திறமையுண்டா?

தலைமைச் செயலாளர், தான் அந்தப் பீடத்திற்கு தகுதியற்றவர் என்பதைக் கூறிவிட்டுப் பின்வரும் செய்திகளையும் தெரிவித்திருக்கிருர்—**"கட்சிக் கல்வி அளிப்பதில் நாம் காட்டிய அசிரத்தை போதுமான ஊழியர்கள் ஏற்படாதபடி செய்துவிட்டது. இது தவிர நமக்குப் பல பிரச்சினைகளில் பொதுவான கருத்துக் கிடையாது. நமது பலத்திற்கு முக்கிய அடிப்படையாக இருக்கும் செயல், சிந்தனை, ஒற்றுமை கட்சிக்குள் மிகக் குறைவு. சொல்லுக்கும் செயலுக்குமுள்ள, முடிவுகளுக்கும் முடிவுகளை அமுல் நடத்துவதற்குமுள்ள, கம்யூனிஸ்ட் கொள்கைக்கும் நடைமுறைகளுக்குமுள்ள வித்தியாசங்கள் நீக்கப்பட வேண்டும். தனிநபர் போக்கை முறியடிக்க வேண்டும். கட்டுப்பாட்டோடு நாம் விளங்கவில்லை என்பதை ஒவ்வொரு கம்யூனிஸ்ட் அங்கத்தினரும் உணர வேண்டும்."** நாட்டின் நலனையும் மக்கள் நலனையும் காப்பதில் எல்லோருக்கும் முன் நிற்பதாகச் சொல்லிக் கொள்ளும் கம்யூனிஸ்டுகளின் நிலைமையை அமிர்தசரஸ் மாநாடு நடந்த பிறகு உள்ள அலங்கோலக் காட்சியை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொல்லுக்கும் செயலுக்கும் உறவில்லை என்று பேசுகின்ற கம்யூனிஸ்டுகள் கண் கூர்ந்து காணவேண்டும். பொது ஜனப் போராட்ட வீரர்கள் பல பிரச்சினைகளில் பொதுவான கருத்தில்லை என்று கண்ணீர் வடித்த அஜாய்கோஷுக்கு என்ன பதில் தரமுடியும்? மீண்டும் மீண்டும் கட்சித் தலைமையைக் குறை சொல்லும் அஜாய்கோஷை "ஏன் இப்படித் தடுமாறுகிறீர்கள் - நீங்கள் தானே அகில இந்தியத் தலைமை-சரியில்லாத பதவியிலேயிருக்கும் நீங்கள் வேருருவரிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிடுங்கள்" என்று உறுதியுடன் உரைக்கக்கூடிய மனவலிவு தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் என்பவர்களுக்கு இருந்தால் முயற்சி செய்து பார்க்கட்டும்! கழகத்தின் தலைவர்களைத் தாக்கிப் பேசுவதற்கு மட்டும் நரம்பில்லா நாக்கு நான்கு பக்கத்திலும் சுழன்று சுழன்று பேசுகிறதே-ஏன் அஜாய் கோஷைப் பார்த்துப் பேச நடுங்குகிறது? திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும் தலைவர்களுக்கு அரசியல் பக்குவம் இல்லை-சர்வ தேசிய பண்புகள் இல்லை என்று ஜனசக்தியிலேயிருக்கும் "உலகம் போற்றும் பேரறிஞர்கள்" பலர் அடிக்கடி எழுதிக் கொண்டிருக்கிருர்கள் - பொது மேடைகளிலும் அண்ணு அறிஞரா?-நாவலர் பட்டம் ஏன்? கலைஞர் பட்டம் எதற்கு? சொல்லின் செல்வர் தகுமா? கவிஞர் என்று சொன்னது யார்? சிந்தனைச் சிற்பி சரியா? பேராசிரியர் என்பது பொருந்துமா? என்றெல்லாம் ஜீவானந்தம், கல்யாணசுந்தரம் மட்டுமல்ல-கந்தசாமிகள்-ரெங்கசாமிகள்கூட, நாட்டு மக்களின் நல்ல தீர்ப்புத் தந்துள்ள அன்புரைகளைக் கேலி செய்து விட்டார்கள்!

இந்தியக் கம்யூனிஸ்டுகள் எத்தகைய ஆற்றல் பெற்ற அரசியல் மேதைகள் என்பதை அமிர்தசரஸ் தீர்மானம் அறிமுகப்படுத்தியுள்ளது-அதனை அந்தத் தோழர்கள் மீண்டும் ஓர் முறை கவனிக்க வேண்டும்! **"பொதுக் கூட்டங்களில் மட்டுமல்ல, சில சமயங்களில் பாராளு மன்றத்திலும் சட்ட சபைகளிலும்கூடச் சொற்பொழிவுகள் கவனத்துடன்தயார் செய்யப்படுவதில்லை. அவை விஷயங்களை விளக்குவதற்குப் பதிலாக வழவழாத் தன்மையும், கூறியதைத் திருப்பிக் கூறுதலையும், கோஷங்களை வீசியெறிதலையும் கொண்டுள்ளதாகயிருக்கின்றன. விஷயங்களைக் கவனிக்காமல் ஒரே மந்தமான பொதுத் தன்மையில் உள்ளன. மேலும் நமது பத்திரிகைகளின் எழுதும் நடையானது உயிரற்றும் பிதற்றலாகவும் போதுமான விஷயங்களைக் கொடுக்காமலும், மக்களின் கவனத்தைக் கவராமலும் உள்ளன. கட்சித் தலைவர்களின் சொற்பொழிவுகள் அறிக்கைகள் ஒழுங்கான முறையில் இல்லை. நமது தீர்மானங்களிலும் இதுமாதிரியான பல குறைபாடுகள் உள்ளன. அவை பல சமயங்களில் நீளமாயும் வெறும் வார்த்தை ஜாலத்தைக் கொண்டதாயும் சுருக்கமற்றும் இருப்பதோடு மக்கள் விரும்பத்தக்க வகையில் எழுதப்படுவதில்லை"** இந்தியக் கம்யூனிஸ்டுகளை அறிஞர்களென்றும் நாவலர்களென்றும் சொல்லின் செல்வர்களென்றும் அழைக்க வேண்டுமென்ருல் எப்படிமுடியும்? அவர்களின் அறிவாற்றல் அவலட்சணப் போக்கில் இருப்பதாக அவர்களே அறிவித்துள்ளார்கள். இவர்களைத்தான் கலைஞர் என்றும் கவிஞர் என்றும் தமிழ் மக்கள் ஏற்க வேண்டுமாம்! 'ஜனசக்தி'யிலேயிருக்கும் பேனு மன்னர்கள் அமிர்தசரஸ் தீர்மானத்தை இல்லையென்று மறுத்துவிட முடியுமா? கம்யூனிஸ்டுகள் எழுதுவதெல்லாம் பிதற்றல்-உயிரற்றவை-இதற்கென்ன மறுமொழி? கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையற்ற கோணல் தன்மையைப் புரிந்துகொண்டாலும் வெளியே சொல்லத் தயங்கும் நல்ல கம்யூனிஸ்டுகள் **ஜெயப்பிரகாஷ் நாராயணன் - அஜாய்கோஷ் கடிதங்கள், அமிர்தசரஸ் வகுத்த வழி, கட்சி ஸ்தாபனக் கடமைகள், என்ற மூன்று புத்தகங்களையும்** நன்ருகப் படித்துப் பார்க்க வேண்டும். தன் மான உணர்விருந்தால் புத்தகம் வெளியிட்ட தமிழ்நாட்டுக் கமிட்டியினரைக் கண்டிக்க வேண்டாம். காரணம் கேட்கட்டும். விளக்கம் பெறுவதற்கு கட்சிக்குள்ளே களங்கம் நிறைந்த பண்புகளைக் குவித்து வைத்துக்கொண்டு கழகத்தின் மீதும் - அதனைச் செயல்படுத்தும் செம்மல்கள் மீதும் சொல்லம்புகள் வீசுவது சரியா என்பதைச் சிந்திக்க வேண்டும். அந்தத் திறன் பெற்றுள்ள ஒரு சில கம்யூனிஸ்டுகள்! தெளிவில்லாமல் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கும் அப்பாவிக் கம்யூனிஸ்டுகளைப் பற்றிய வருங்காலப் புதிய சமுதாயத்தின் தீர்ப்பு மிக மிகத் தாழ்வாகத்தான் இருக்கும். கழகக் கதிரவன் காரிருளை நீக்குவான் - கண்ணியம் பெறுவான்!

—கூடலரசன்

## வெண்பாப் போட்டி-27.

ஈற்றடி :

நாடிக் திரியோமே நாம்.

முடிவு தேதி 4-10-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.



# இழந்த சொர்க்கம்

…………… க்கு,

கடைசியாக எழுதுகிறேன். என்னையே உனக்கு எழுதிக்காட்டி விடுவதற்காக எழுதுகிறேன். அத்தனையும் எழுதிவிட்ட பின்பு அலை ஓய்ந்த கடலின் அமைதியோடு என் இதயத்தை வைத்துக்கொள்வதற்காக எழுதுகிறேன். நேற்று முன்னாள் நல்ல வெயிலின் பொழுதில் உனது கடிதம் எனக்கு வந்தது. வரிக்கடங்காத கோணல் எழுத்துக்கள் உன் இதயத்தின் வார்த்தைகளாக நீண்டிருந்தன. எனக்கு சிரிப்பும் வந்தது, கொஞ்சம் அழவும் செய்தேன். நடந்து தேய்ந்துபோன நிகழ்ச்சிகளை இன்னும் மனதில் வைத்திருக்கிறாயே என்று சிரிப்பு. உன் பரிதாபத்தை எண்ணி அழுகை! என்னால் நீ கெட்டுப்போனாய் என்று இன்னும் கருதவில்லை. உன்னால் புதியவைகளை நான் அறிந்தேன். என்னால் நீயும் உலகை புரிந்துக்கொண்டாய் என்றே கருதுகிறேன்.

“எல்லோரையும் மறந்துவிட்டாயே. பெண் பலவீனமானவள் என்பது சரிதான். வெட்கங்கெட்டு நானே உனக்கு எழுதுகிறேன். எப்படியெல்லாம் இருந்தோம். எல்லாவற்றையுமா மறந்துவிட்டாய்? ஒருமுறை எங்கள் கிராமத்திற்கு வந்துபோ. உன்னைப் பார்க்கவேண்டும். உன்னிடம் பேசவேண்டும். உன்னிடம் அழவேண்டும். உன்னிடம் சிரிக்க வேண்டும் என்ற எனது ஆசைக்கு மட்டே இல்லை. உனக்கென்னைத் தெரியும். நான் இன்னும் உன்னை அறியவில்லை. அதனால் நீ வருவாய் என்றும் நான் நம்பவில்லை…”

உனது கடிதத்தின் இந்த வரிகளை நினைவாக வைத்து உன் சொற்களை மீண்டும் உனக்கே எழுதுகிறேன். நான் மறக்கவில்லை என்பதற்காக. தொடர்பு என்பது என்ன? ஆனென்ற வெறியும் பெண்ணென்ற அமைதியும் குழைந்து கலப்பதுதான் தொடர்பா? வாழ்க்கையின் எண்ணற்ற பெரும்புயல்களிடையே ஆணும் பெண்ணும் கொள்ளும் தொடர்பின் சக்தி அழிந்துதான் போகிறது. அப்படி அழிந்துபோகும் சக்தியை ஏன் பொருப்பாக்கி புகைந்து நலிய வேண்டும்? நான் இன்னும் புயலின் சீற்றத்திற்கு குழைந்து சாயவில்லை. அதனால் பழசை நினைத்துக்கொண்டு எழுதுகிறேன்.

மணமாகி வந்த புதுமையில் கணவன் மலர்ச்சியின் முகத்தோடு உன் அருகில் இருக்கும்போது முதன் முறையாக உன்னைக் கண்டேன். உனக்கு அந்த கணத்தில் என்னைப் பற்றி என்ன தோன்றியது என்று என்றுமே நீ சொல்லவேயில்லை. இதைத்தான் நான் பெண்ணின் புதுமை என்று எண்ணுகிறேன். அன்று உன்னைப் பார்க்கும் முதற் படியில் நான் இருந்த கோலம், மேலே சட்டை யணிந்திருக்கவில்லை. அன்று குளிக்கவில்லை. தலைவாரிக் கொள்ளவில்லை. அழுக்கு ஆடையை மடித்துக் கட்டியிருந்தேன். ‘எவனோ ஒருவன்’ என்று நீ நினைத்திருக்கலாம். காதல் என்ற மயக்கத்தை எழுதுகையில் உண்மைக்குப் புறம்பாகப் பிதற்றல் எழுவதாக எனக்குப் பிரமை தட்டுகிறது. ஆனாலும் உணர்வை உயிரோடு வடித்துக் காட்டாவிட்டால் மனம் அடங்கமாட்டேன் என்கிறது. அடங்காத மனத்தின் அமைதிக்கு, நான் உன்னைக் கண்டதும் அந்த விபரீத ஆசை கொண்டேனோ என்னமோ. காதல் என்பது, ஒரு வகையில் விபரீத ஆசை. ‘விபரீதத்தினால் எல்லாம் ஒழுக்கடித்துக் கொண்டு போயிற்றே’ என்று அழுகிறாயே. எனக்கு எதுவுமே விபரீதமாகப் படவில்லை.

நான் இப்பொழுதெல்லாம் சிந்திக்கிறேன். மனிதன் சிந்திக்கவேமாட்டேன் என்கிறான். என்று ஒரு புத்திசாலி வருத்தப்பட்டுவிட்டு போனார். அதிலிருந்து மனிதனாக இருப்போமே என்று சிந்திக்கிறேன். இரவில் எல்லோரும் உறங்கிவிட்ட அமைதியில் வெளியே தெரு வாசலில் வந்து நின்றுகொண்டு வானத்தைப் பார்ப்பேன். நீலத்தில் படர்ந்த இருள்–இருளில் படர்ந்த சூன்யம் – சூன்யத்தில் படர்ந்த அமைதி – அமைதியில் நம்பிக்கைபோல நிலா. நிலாவில் மிதக்கும் நட்சத்திரங்கள்…குளிர்ந்த காற்று…பார்வை தாழும்போது புலப்படும் தென்னைகள். இருள் மூடிய கறுப்பு பரவலாக மரங்கள்…உலகின் அமைதியில் அதாவது புத்திசாலி என்ற மனிதனின் உறக்கப்பொழுதில் இயற்கையும் சுற்றமும் காற்றும் அமைதியாகத் தவம் செய்கின்றன. அந்த அமைதியான தவிப்பின் சிந்தனைக்குச் சூடாக அருகில் நீ இருக்க வேண்டும். மனதில் சுருண்டெழும் சிந்தனைகளை உன் காதுகளுக்குமட்டும் பகிர்ந்து தர வேண்டுமென்று எனக்கு அந்த கணத்தில் ஆசை. ஆனால் பிறகு, வந்து படுத்து அறையின் குமைந்த மணத்தோடு ஒன்றுகையில் நீ வேண்டாம். வெறுப்பு. உன்னிடம் வெறுப்பு. அருகில் அங்கிங்காக படுத்துத் தூங்கும் மற்ற தூங்குமூஞ்சிகளிடம் வெறுப்பு. எல்லாவற்றிடமும் வெறுப்பு. அப்படி வெறுப்பின் விடிவிற்காக உறங்குவேன்!

உனது படுக்கையின் அருகில் வந்தமர்ந்திருந்து, உன் கன்னத்தில் சரிந்த கூந்தலை மெல்ல நெற்றியில் எடுத்துவிட்டபோது நீ கண் திறந்து மிரளப் பார்த்தாய். பார்த்தபோது என் வலது கையின் மூன்று விரல்களும் உன் உதடுகளில் வந்து அழுந்தின. அந்த விரல்களை எடுத்துத் தூர வீசாமல் எழுந்து அமர்ந்த உன்னிடம்; “எனக்கு உன்னிடம் நிறைய பேச வேண்டும்” என்று சொன்னேன். என்றுமட்டும் சொன்னேன். அன்று, நான், வெறும் நீயென்ற நினைவினனாக இருந்தேன். ஆனாலும்–‘நான் பெரிய சிந்தனையாளன்’ என்ற நினைவு மனதில் உண்டு. ராட்டினத்தின் மரக் குதிரையில் அமர்ந்த சின்ன உள்ளத்தில், தான் பெரிய போர்க்களத்தில் குதிரையில் செல்வதாக பாவனை இருக்கும். அதேபோன்ற தற்பெருமை நினைவுதான் அன்று எனக்கு இருந்தது என்று இன்று தெரிகிறது. இன்றைய தெளிவின்மை நாளைத் தெரியும்!

உனக்குத் துணையிருக்க வந்த நான். உன்னிடம் பேச வேண்டுமென்று சொன்னேன். வாழ்வில் அதுவரை நான் பேசியதேயில்லை. நான் எது சொன்னாலும் எதிர்த்துவார்த்தையெறியாத உன்னிடம், என் ரகசியங்களையெல்லாம் பேச வந்தபோதுதான், எனது வருகை விபரீதத்தையும் சேர்த்து வந்ததென்பது தெரிந்தது. உன் நெஞ்சைத் தடவினேன். அதுவும் விபரீதம் ஆயிற்று!

என் மனதிலிருந்ததெல்லாம் உன் நினைவுதான்.

நீ மணமானவள். உன்னிடம் ரகசியம் புதைக்க உரிமைகொண்டவன், மற்றொருவன் என்பதை நான் மறந்தே போனேன். மனிதனுக்கு இந்த மறதி யுக யுகாந்திரமாக உள்ளது. அதனால்தான் தவறு செய்யக்கூடாதென்று சட்டம் செய்தான். ஆனாலும் மறைவில் நிறைய மறதியின் குழப்பம் நிகழுகிறது. அந்த ‘நிறைய’ என்ற பெருமளவில் நானும் ஒரு துளி. கால காலமாக வரும் மறதியானதினால் நானாகும் ‘துளி’ சாரமற்றது என்று உன்னையும் என்னோடு கலக்க வைத்தேன். அன்று கையின் விரலில் கை அழுந்தியபோது நீயாவது நினைவுபடுத்தியிருக்கலாம். போகட்டும். நீயும் மறந்தேதான் போனாய். இதை இந்த வெள்ளைக்காகிதத்தில் சிறிய எழுத்துக்களில் உருட்டி உருட்டி எழுதுகையில் நீரில் தெரியும் நிழல்போல, உன் முகம் எழுத்தெல்லாம்–வார்த்தையெல்லாம்— வரிசையெல்லாம் பளிச்சிடுகிறது! அழகான நீண்ட மூக்கு. சிரித்த கண்கள். தெளிந்த நெற்றி. மலர்ந்த சிரிப்பு. இதில் நீ நிறைவு பெறுகிறாய். நான் அதில்தான் நிறைந்து கலந்தேன். அழகான ஒரு பெண்ணிடம் தொடர்பு கொண்டு அவள் மனதோடு கலந்தால், என் இதயத்தின் ரகசியங்களையெல்லாம் அவளிடம் சொல்ல வேண்டுமென்று நான் நினைத்து வைத்திருந்தேன். அந்த இரவில், உன்னிடம், நிறைய பேசவேண்டுமென்று சொன்ன வார்த்தைகளில் அடங்கிய ‘நிறைய’ என்பது என் மனதின் ரகசியங்கள்தான்!

உன்னிடம் எல்லாம் சொன்னேன், கனவை, சிந்தையை, செயலை, லட்சியத்தை, சாதனையை எல்லாவற்றையும் சொன்னேன். நீ என்னை, வேடிக்கை கதை சொல்லும் விசித்திர மனிதனைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டேயிருக்கும் இரவுகள் இன்னும் என் இதயத்தில் மணக்கின்றன. பதினொரு மாதங்கள் அப்படி கடத்தினோம். ஆனாலும் நான் உன் இதயத்தைத் தொட்டுச் சிலிர்க்க வைத்தும் ‘விபரீதம்’ என்ற விபரீதத்தை செய்தேனா? நாம் என்னவெல்லாம்தான் பேசிக்கொண்டோம். ஒரு பெண்ணிற்கும் ஆணிற்கும் அதற்குமேல் பேசுவதற்கும் எதுவுமில்லைதான். அந்த ஒன்று மட்டுந்தான் விபரீதமா? ‘எல்லாம் விபரீதம் ஆயிற்றே?’ என்கிறாயே. பதினொரு மாதத்தின் எண்ணற்ற தனித்த பொழுதுகளில் நான் உன் நெஞ்சில் முகம் புதைத்ததன்றி வேறு எதை அறிந்தேன்?

உன் கணவனை நான் இன்றும் மதிக்கிறேன். போதும். அவனைப் பற்றி நான் அவ்வளவுதான் சொல்வேன். நீ அவனை பூஜிக்கிறாயா என்னமோ. ஆனால் நீ அவனிடம் அன்பாகப் பேசுகையில் சிரித்துப் பேசுகையில் எல்லாம் ஏனோ நான் பொறாமைப் பட்டதுண்டு. வரம்பு மீறிய பொறாமை!

“நீ இன்னும் இங்கே வருவது நன்றாக இல்லை. நாலு பேர்கள் நாலு விதமாகச் சொல்கிறார்கள். அன்றொருத்தி உன்னை–யார் என்று கேட்டாள். ‘என் அண்ணன்’ என்று சொன்னேன். ‘அதுதானே பார்த்தேன். சாயல்கூட ஒரேமாதிரி இருக்கிறது.’ என்று சொன்னவர்கள் இன்று வேறு விதமாகப் பார்க்கிறார்கள். சொந்த அண்ணனும் தங்கையும்கூட தனித்துப்பேசினால் கண்ணைத்திறந்து பார்ப்பவர்கள் எனக்கு பலர் உன்னை நன்றாகத் தெரியும்’ உனக்கும் என்னை நன்றாகத் தெரியும். பின் உன் இஷ்டம்” நீ சொன்ன இந்த வார்த்தைகள் ‘எண்ணம் என்ற எனது நாட் குறிப்பில், அன்று நான் பொறித்த அதே கண்ணீர் வடுவோடு இன்றும் தெளிவாக இருக்கின்றன. உன் நினைவின்போதெல்லாம் அதை எடுத்துப் படிப்பேன். இப்பொழுதும் பார்த்தேன். அந்த மாலைப் பொழுதில் நான் அங்கிருந்து புறப்பட்டு இத்தனை நாட்களுக்குப் பின்பு நீ எழுதியிருக்கிறாய்.

காலம் எவ்வளவு ஆயிற்று. பதினெட்டு மாதங்களுக்குப் பின்னர் இப்பொழுதுதான் உனக்கு என் நினைவு வந்ததா? போகட்டும். பெண்ணென்ற புதிர் அப்படித்தான்!

பிரிவிற்குப் பின்னர் என்ன நடந்தது தெரியுமா? அன்றிரவு அழுதேன். அழுதுவிட்டு, ‘அழக்கூடாதென்று’ எனக்கு நானே தேறுதல் கூறிக்கொண்டு, சிரிக்க முயன்றேன். சிரிப்பு பரிதாபமாக எழுந்து பிறவியிலேயே முடிந்தது. நீ அன்று அழுதிருப்பாயோ என்னமோ. உன் கணவனுக்காகச் சிரித்திருப்பாய். அவன் நல்லவன். அவனுக்காக எப்பொழுதும் சிரி. அவனுக்குமட்டுமாகச் சிரிக்க வேண்டிய உன்னை எனக்காகவும் சிரிக்க வைத்தது தவறு. ‘மறந்துவிட்டாயா?’ என்று கடிதம் எழுதியிருக்கிறாய். ஆமாம். என்னை நான் மறக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

உன் அழைப்பை ஏற்றுக்கொண்டு நான் அந்த கிராமத்திற்கு வரமுடியாது. ‘நீ வருவாய் என்று நான் நம்பவுமில்லை’ என்று தீர்க்கதரிசி போல நீயே எழுதிவிட்டாய். அந்த கிராமத்தின் கள்ளமற்ற மனிதர்களும் அவர்களது உழைப்பும், உள்ளமும், சூழ்ந்துள்ள ஆறு, குளங்களும், உயர்ந்த மலையும், நீண்ட வரப்பு பாதைகளும் உன் கணவனும் குழந்தையும், எல்லாம் தான் உண்மையானவைகள். நானும் என்னால் வந்த அனுபவங்களும் பொய். அதனால்— அதனாலென்ன? என்னைப் பற்றி நன்றாக அறிந்த உனக்கு மேலும் எதைச் சொல்ல? அவ்வளவு தான். இனி எழுதாதே. இந்தக் கதை முற்றுப் பெறவும் வேண்டாம் இனி தொடரவும் வேண்டாம்.

என்றும் உனது,

……………………

— ஆ. மாதவன்

— 2ம் பக்கம் தொடர்ச்சி —

இந்தப் போட்டிகள் அதைத்தான் நமக்குப் பட்டயமடித்துக் காட்டுகின்றன.

இவற்றை முறையாக, ஒழுங்காக, திறமையாக நடத்த எத்தனை ஆற்றல் வேண்டும்?

'ஊர் கூட்டித் தேர் இழுத்தல்' பெரும் சாதனை என்பார்கள். அதைவிடப் பெரும் சாதனை, நாடெங்கும் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஒழுங்குபடுத்தி போட்டியில் கலந்துகொள்ளச் செய்வது. சாதாரணமாக ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் பிரம்பைக் காட்டி, உயர்நிலைப் பள்ளியில் அபராதத்தைக் காட்டி, கல்லூரியில் அரசாங்க ஆணையைக் காட்டினுலேகூட இந்த மாணவர்கள் 'டிமிக்கி' கொடுத்துவிடுவார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் சேர்த்துப் பிடித்து, இணைத்து, இழுத்துக்கொண்டு போவது என்றால், அது சாதாரண காரியமா?

இந்த அசாதாரணமான காரியத்தைத்தான் இந்த மாணவர் மன்றம் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறது. ஆனால் யாருக்குத் தெரிகிறது அந்தச் சாதனை?

பூக்கடைக்கே விளம்பரம் தேவைப்படும் காலம் இது!

இந்தக் காலத்தில் போய், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று சத்தம் போடாமல் செயல்படுவதை இந்தப் 'பச்சை'த் தமிழன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவா போகிறுன்!

பாவம் இந்த மாணவர் மன்றத்தினர்! அவர்கள் தங்கள் செயல்களை வெளிக்குக் காட்டிக்கொள்ள வேண்டும். 'ஆஹா! ஊஹூ!' என்று ஆர்ப்பாட்டம் செய்யாவிட்டாலும், என்னென்ன செய்திருக்கிருர்களோ அதையெல்லாம் விடாமல் சொல்லிக்கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்தால்தான் 'நமக்கென்ன', 'நமக்கென்ன' என்றிருக்கிற இந்தப் புத்திசாலித் தமிழனின் கண் திறக்கும்; காது கேட்கும்!

இந்த சென்னை மாணவர் மன்றம் வாழவும், வளரவும் பணியாற்றுபவர்கள் தமிழகமெங்கணும் இருக்கிருர்கள். இவர்களுள் அந்த மன்றத்தை நினைத்தவுடன் நம் கண்முன் நிற்பவர்கள் **டாக்டர் தருமாம்பாள் அம்மையார், பேராசிரியர் மயிலை-சிவமுத்து, புலவர்கள் கோ. வில்வபதி, தணிகை- உலகநாதன் மற்றும் பலர்.**

தருமாம்பாள் அம்மையார் என்றதும் உடனேயே நமக்கு அவரது தொண்டுகள் அனைத்தும் நினைவுக்கு வரும். தமிழுருவான அவர்கள் ஆற்றியுள்ள பணிகள் எக்காலும் மறக்கமுடியாதவை. இந்தி எதிர்ப்பு, தமிழ் வளர்ச்சி, பெண்கள் நலம் இவற்றில் அயராது பாடுபட்டவர்கள் அவர்கள். இந்த முதுமையிலும் அவர்கள் மன்றத்தின் காப்பாளராக இருந்து செயல் படுகிருர்கள்.

பேராசிரியர் மயிலை-சிவமுத்து ஒரு புதுமையான மனிதர். காலையிலிருந்து இரவுவரை 'மன்றம்', 'மன்றம்' என்றே அலைகிறவர் அவர். மற்றவர்கள் வேறு பணிகளோடு மன்றப் பணிக்குத்தும் நேரத்தை ஒதுக்கிக் கொள்பவர்கள். அவரோ மன்றத்துக்காகவே வாழ்கிறவர். மன்றத்தின் மழலைப் பருவம் முதல் காளைப் பருவம் வரை செயல்படும் தனிப் பெரும் புலவர். மன்றத்தின் உயிர் நாடி அவர். அவருடைய சலியா உழைப்பும், தளராத தமிழ்ப் பற்றும் தமிழகமெங்கும் பிரசித்தம். அவரே மன்றம்; மன்றமே அவர்!

புலவர் வில்வபதி, தணிகை-உலகநாதன் ஆகியோர் நடமாடும் விசைகள். எப்போது பார்த்தாலும் மன்றப் பணிகளுக்கே நேரத்தை ஒதுக்கிக் கொள்பவர்கள். மன்றத்தின் வளர்ச்சியில் அவர்களுக்கும் குறிப்பிடத்தக்க இடம் உண்டு.

இந்த மாபெரும் சென்னை மாணவர் மன்றம் கடந்த 6, 7-9-'58 நாட்களில் தனது 27-ம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்புறக் கொண்டாடியது.

டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ., பி. எச். டி., எம். எல். சி., அவர்கள் தலைமை வகித்தார்கள். அறிஞர் பலர் விழாவில் கலந்துகொண்டார்கள்.

6-9-'58 காலை ஓவியக்கண்காட்சி ஒன்று திறந்து வைக்கப்பட்டது. 'தென்றல்' ஆசிரியர் கண்ணதாசன் ஓவியக்காட்சியைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினுர்.


மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

குழந்தைகளின் மாறுவேடப் போட்டி நடைபெற்றது.


இத்தகைய சிறப்பு வாய்ந்த மன்றத்திற்குச் சொந்தக் கட்டிடம் இல்லை. கட்டிடத் தேவையை வற்புறுத்தி, நிதி உதவிகேட்டு பேராசிரியர் மயிலை-சிவமுத்து அவர்கள் சமீபத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

செயற்கரிய பணிகளைச் செய்யும் இந்த மன்றத்தின் வளர்ச்சிக்காகத் தங்களால் இயன்ற அனைத்தையும் அளிக்கவேண்டியது தமிழ்மக்கள் கடமை.

வாழ்க சென்னை மாணவர் மன்றம்!



ஏழை மாணவர்களுக்குக் கஞ்சி வார்த்தல்



ஓவியக் கண்காட்சியை கண்ணதாசன் திறந்து வைக்கிருர்



பரிசு பெற்ற ஓவியம்

# வெண்பாப் போட்டி

## 26. பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

பேசுகின்ற தெய்வங்கள் பிச்சை யெடுக்கையிலே
பேசாச் சிலைக்கேன் பெரும்விழவு ?—காசினியில்
யாசிக்கும் ஏழைக்கு அன்னமிடார் ஆண்டவனைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—மு. வரதராசன், துறையூர்.

❁

ஆடுவதும் பாடுவதும் ஒண்டொடியே முத்துருட்டிப்
போடுவதும் எண்ணியேப் பார்ப்பதுவும்—கோடாங்கி
தோசமுள தென்பதுவுஞ் சுகங்கொடுக்கத் தேவதையைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—குகன்குருசாமி, கமுதி.

❁

அன்பான உள்ளமே ஆண்டவன் இல்லென்னும்
பொன்னுன வாக்கின் பொருளறியார்—பன்னுளும்
காசி திருத்தில்லை காளத்தி சென்றங்கே
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—ந. இராமசாமி, சித்தயன்கோட்டை.

❁

தேங்காயும் தீம்பாலும் தெள்ளுதேன் கற்கண்டும்
நீங்காச் சுவைக்கனியும் நல்லுணவும்—பூங்குயிலே !
பேசாக் கடவுளரின் பேர்சொல்லி உண்ணுதற்காம்;
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—க. இன்பவல்லி, சுந்தராபுரம்.

❁

காண்பதெலாம் தெய்வமென்று கன்னத்தில் தானடித்து
ஆண்மையென் றெண்ணிந்து ஆடிடுவார்—ஆண்டவனை
நேசிப்பதும் பச்சைப் புளுகாகும் நித்தமவர்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—செ. கி. செயராமன், செம்மியமங்கலர்.

❁

ஆற்றும் தொழில்விநம்பி அன்பு மனைமறந்து
வேற்றூர் வதிந்து விடுமுறையில்—கேற்று வந்திர்
பேசியே நாளைப் பிரிந்திடுவீர் இன்றென்னைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

— ந. ஜாபர், சித்தூயன்கோட்டை.

❁

நாவற்ருேர் பேசுவதும் நாடிழந்தோர் வாழ்வதுவும்
சாவற்ருேர் உள்ளுவதும் சன்மார்க்கப்—பாவலனே !
மாசுடையோன் தெய்வத்தை உள்மனத்தால் நித்தமுமே
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—அரும்பு, அம்மாபட்டி.

❁

தாயென்பார் சேயென்பார் பாலென்பார் தேனென்பார்
நீயென்றே நீட்டி முழக்குவார்—தாய்த்தமிழே
மாசுற்ருேர் காசுற்ருேர் மண்ணின்மேல் உன் புகழைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

— உடுமலை இளமாறன், கரடிவாவி.

❁

அள்ளிக் கொடுக்காதே ஆலயத்தின் பேராலே !
கள்ளத் தனமாகும் செய்வதெல்லாம்—உள்ளபடி
ஆசையொடு வாழ்ந்து, வடமொழியால் நித்தமுமே
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

— ப. குருதேவன், தேவதானப்பட்டி.

❁

என்னுயிரே ! இன்னமுதே என்னரசே ! நீயின்றி
என்னுயிரும் இல்லைஇனி என்றெல்லாம்—அன்பொழுக
காசினியில் வேசியர்கள் நம்மவரை நேசமுடன்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

— எ. கலையன்பன், திருவையாறு.

பண்பின் முதலாம் பகர்கடவுள் பைந்தமிழாம் !
தண்வழி பாடாம் தமிழொழுக்கம் !—நண்பனே !
காசுபெறச் செய்சடங்கு கண்மறைப்பாம் ! கல்மண்ணைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

— மு. முகம்மது அலி, காரைக்கால்.

❁

வாய்க்குவமை செம்பவளம்; வட்டநிலா உன்முகமே !
தேய்பிறையே நின்நுதலும் தேமொழியே !—சேய்மழலை
பேசுகின்ற உன்பேச்சால் பித்தானேன் என்றென்னைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—தா. இளங்கீரன், திருவையாறு.

❁

சாராயத் 'தண்ணி'யினுல் பூசாரி ஆடினுல்
ஏறிவிட்டான் சாமியென்றே ஏற்காதீர் !—ஊரறியப்
பேசுவதும் பாடுவதும் பேசாத கல்லையவன்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

❁

தென்னகத்தின் கோவிலிலே செந்தமிழ்த்தாய்த் தெய்வத்தை
மன்னுபுகழ் வள்ளுவனின் மாமறையால்—நன்னெறியில்
பூசிப் பதைமறந்தே வெற்றுக்கற் பல்லுருவைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

❁

மண்ணில் புகழ்விளங்க மாத்தமிழர் ஆண்டிட்ட
எண்ணில் கலைகொண்ட இன்றமிழை—கண்ணிமைபோல்
நேசிப்போம் என்றுரைக்கும் நேர்மையற்ற 'காங்கிரசார்'
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—புலவர், பா. இளந்திரையன், கரந்தை.

❁

தான்படைத்த யாவையும் தான்காக்கும் தெய்வமென்ருல்
கூன்,குருடாய் ஏழையராய் வாழ்கின்ருர் !—ஏன் சொல்வீர் ?
காசு பறித்திடவே ஏய்க்கின்ருர் ! அவ்விறையைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—புத்தூரான், க. புதுப்பட்டி.

❁

பாசி படர்ந்திருக்கும் பாரிதனில் பண்பார்ந்த
நேசம் வளர்வதெங்கே? நெஞ்சுதனில் !—தேசுநிறை
காசி நகர்சென்று காசைச் செலவாக்கிப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—பெ. அ. இளஞ்செழியன், பெருவளப்பூர்.

❁

சாதித் திமிருற்ருேர் சாத்திரங்கள் போற்றிடுவோர்
ஓதும் தமிழன்பு ஒண்ணுதோர்—காதலுடன்
நேசிப்பார் போல்கூடி நேரமெலாம் பாரதியைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—அரி-"மதி" திண்டிவனம்.

❁

வேசி தொடர்பை விரும்புதலும், வீணுகக்
காசிற்குக் கொள்கையை விற்பவரின்—நேசிப்பும்
மாசில்லா நம்கொள்கை தூற்றுதலும், கல்லைப்போய்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—வள்ளிகாந்தன், கரந்தை.

❁

மண்ணிலும், கல்லிலும், மக்கிவிழும் தூண்களிலும்
திண்ணமாய் தெய்வம் இருக்குதென்பார் !—மண்ணுலகில்
காசுக்குப் பாடும் கயவர்கள் தெய்வமதைப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

சு. மா. இராமலிங்கன், கலிதீர்த்தான் குப்பம்.

❁

காடனை ! மாடனை ! காத்தவ ராயனை !
வேடனை ! வில்லன் இராமனை !—தேடியே
வேச விபூதியுடன், வேதம் உரைத்தோதிப்
பூசிப் பதுஞ்சுத்தப் பொய்.

—ஆதவன், பம்பாய்-38.



எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு